மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 3 சுற்றம் : 8 ஆகஸ்ட்டு 2015 விலை : ரூ.10/- ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி



## நடிப்பிசைப் புலவர்
## கு. இரா. இராமசாமி (K.R.R)
## நூற்றாண்டு நிறைவு

NEW

FLAT FOR SALE @ BESANT NAGAR

**4 - in -one luxury Apartment**




Site at :

49, MGR Salai,
**Kalashetr**a Colony,
Besant Nagar,
Chennai.

Suresh & Co.
Engineers & Builders

#22, Ponniamman Koil Street Urur, Adyar, Chennai - 20.

ph:044-24463149
94440 18004
94440 48902

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly August 2015

## உள்ளே

மதுவிலக்கு
*தலையங்கம்*........ 4

நடிப்பிசைப் புலவர் கு. இரா. இராமசாமி
*நூற்றாண்டு நிறைவு*........ 6

கவிதை
*தரா கார்த்திகை*........ 9

தெரிந்துகொள்வோம்
*உமா மகேஸ்வரி*........ 10

அத்திவாரம் (சிறுகதை)
*தரா. கார்த்திகை*........ 13

அடேங்கப்பா சிந்தனைகள்
*அ.அமல்ராஜ்*........ 16

சீவகசிந்தாமணி (தொடர் கட்டுரை)
*புலவர் கு. ஏழுமலை*........ 18

கைது செய்வது குறித்த சட்டம்
*என்னவென்று தெரிந்து கொள்வோம்*........ 20

வல்லூறுகளுக்கு அழைப்பு
*பாசறை முரசு*........ 23

உண்மையைத் தேடி (தொடர் கட்டுரை)
*இராஜாசிங்*........ 27

மழலைக்கு விடுதி (சிறுகதை)
*இருங்கோவேள்*........ 31

ஜனநாயக நாடு
*வேர்மகள்*........ 33

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம் .ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** பி.ஏ.,
**நாராயணன்**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**ஜான்டேவிட்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
V.**கணேஷ்** திருவல்லிக்கேணி
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**
அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் “mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



இன்றைய தமிழக அரசியல் மதுவிலக்கை மையமாக வைத்து சுழன்று கொண்டிருக்கிறது. தொடக்கத்தில் இருந்தே மதுவிலக்கு வேண்டும் என்று போராட்டங்கள் நடத்திவரும் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மதுவிலக்குப் போராட்டங்களில், மாணவர்களை அரசியல் கட்சிகள் தவறாக வழி நடத்துகின்றன என்கிறார். மாணவர்கள் மது வேண்டாம் என்று போராடுவது தவறு என்று சொல்கிறாரா? என்ற ஐயம் கொள்வோரும் உண்டு.

மதுவிலக்கை இதுவரை பெரிதாகப் பேசாத பலகட்சிகள் இப்போது தங்கள் கட்சிகளின் முழுமுதற் கொள்கையே மது விலக்குதான் என்பது போல போராடுவது காணக்கிடைக்காத காட்சிகளாகத்தான் இருக்கின்றன.



குழந்தைகளுக்கு மதுவூட்டல், பள்ளிச்சிறுமி மதுவுண்டு தெருவில் தகராறு என்ற செய்திகள் வரத் தொடங்கியவுடன், புகையத் தொடங்கிய மது விலக்குக்கு ஆதரவான எண்ணங்கள் சசிபெருமாள் அவர்களின் இறப்பிற்குப்பின் தீயாகப் பரவி விட்டது. உண்மையில் மதுவிலக்கை முழுமையாக ஆதரித்தவர் சசி பெருமாள் அவர்கள்தான். இன்னும் சொல்ல வேண்டுமானால் அவரது அந்த நேர்மையான தாக்கம் அவரது குடும்பத்திற்கும் இருப்பதைப் பார்க்க முடிகிறது. அவரது குடும்பத் தாரும் போராடுகின்றனர்.

மதுவிலக்கு வேண்டும் என்ற நிலையை எல்லாக் கட்சிகளும் எடுத்திருக்கின்றன. ஆளும் அதிமுக வைத் தவிர. பிறகு ஏன் இதற்கு ஆதரவில்லை. அவர்கள் நடத்துவதற்கு நாங்கள் ஆதரவளிக்க மாட்டோம் என்று கூறி தங்களுக்குள் வேறுபாட்டைக் காட்டவேண்டும்? அட, அரசியல் கட்சிகள்தான் இப்படி அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால் வியாபாரிகள் சங்கங்களில் கூட மாறுபாடான செயல்பாடுகள் நிலவுகிறது.

வைகோ போராடுகிறார், அவரது தாயும் போராடுகிறார் மதுவிலக் குக்கு ஆதரவாக. செய்திகளைப் பார்க்கிறோம். ஆனால் சமூக ஊடகங்களில் ஒரு செய்தி பரவிக்

# மதுவிலக்கு

கொண்டிருக்கிறது. என்னவெனில் திரு வைகோ அவர்களின் புதல்வர் ஒரு சிகரெட் நிறுவனத்திற்கு முகவாண்மை செய்து கொண்டிருப்பதாக. இது உண்மையா? அவ்வாறெனில் மதுவை விட சிகரெட் நலம் பயப்பதா? பொதுவாழ்வில் இருப்போர் தங்களைச் சார்ந்தோரை தூய்மையாக வைத்துக் கொள்ளத் தேவை யில்லையா? அதேபோல் திருமா வளவனும் மது அருந்துவதுபோல் ஒரு காட்சியும் அது மதுவல்ல, அந்தக்குவளையில் எதை ஊற்றி னாலும் பொன்னி றமாகத்தான் தெரியும் என்ற விளக்கமும் முகநூலில் வலம் வந்தன. அது போதா தென்று அரசியல் தலைவர்களின் வாரிசுகள் மது அருந்துவது போன்ற காட்சிகளும் வந்தன.

மதுவிலக்கு பற்றி கருத்துக்கூறாத தி.மு.க. திடீரென மதுவிலக்கு கொண்டு வருவோம் என கூறியதும் அக்கட்சிக்கு ஆதரவும் எதிர்ப்பும் கிளம்பிவிட்டன. பெரியவர் சசிபெருமாள் கலைஞ ரைச் சந்தித்து நன்றியும் கூறி வந்தார். வேறு பலரும் சென்று வந்தனர்.

மதுவிலக்கு வேண்டும் என்று சொல்கிற தி.மு.க. மதுவிலக்குக்கு ஆதரவான வைகோ, திருமா, ஜவாஹிருல்லா, பொதுவுடைமைக் கட்சிகள் நடத்தும் போராட்டங்களுக்கு ஆதரவு இல்லை என்று கூறுவது ஏன் என்று விளங்கவில்லை. அதே நேரத்தில் நாங்கள் தனியாக போராட்டம் நடந்துவோம் என்கிறார்கள். நடத்தவும் செய்கி றார்கள். இக்கட்சியின் முக்கியப் புள்ளிகளான, டி.ஆர்.பாலு, ஜெகத்ரட்சகன் இன்னும் பலர் நடந்தும் மது ஆலைகளைப்பற்றியும் அங்கே தயாரிக்கப்பட்டு விற்பனையாகும் மதுவின் மதிப்பு பற்றியும் சமூக ஊடகங்கள் செய்திகளையும் அதிருப்தியையும் பரவச் செய்து கொண்டிருக் கின்றன.

முடிவெடுக்க வேண்டிய தமிழக அரசு இரண்டும் கெட்டான் மனநிலையால் தவித்துக் கொண்டிருக் கிறது. இவர்கள் சொல்லி நாம் மதுவை விலக்கிக் கொள்வதா? என்ற நிலை ஒன்று. மதுவிலக்கு கொண்டு வராவிட்டால் சட்டம் ஒழுங்கு கெட்டு அரசுக்கு அவப்பெயர் ஏற்பட்டு அடுத்த முறை ஆட்சிக்கு வரமுடியாது போய் விடுமோ என்ற மற்றொரு நிலை. ஜெயலலிதா என்ன செய்யப் போகிறார்? அது அவருக்கு மட்டும்தான் தெரியும்.

தற்போது தமிழக அரசிற்கு உச்சகட்ட அவமானம் ஒன்று உண்டென்றால் காவல்துறை யினரை குடிப்பவர்களுக்குக் காவல் இருக்கும்படி கட்டளையிட்டிருப்பதுதான்.

மது சமுதாயக்கேடு என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. அதை வைத்துக்கொண்டு அரசியல் நடத்தாமல் முழு மதுவிலக்கை கொண்டு வந்து, நாட்டின் நலனைப் பாதுகாக்க வேண்டியது தலைவர் என்று சொல்லிக் கொள்கின்ற ஒவ்வொரு வரது கடமையுமாகும். அதே சமயத்தில் மதுவுக்கு அடிமைப்பட்ட மனிதர்களையும், மது என்ற கொடிய நோயால் பாதிக்கப்பட்டவர்களையும் படிப்படியாக விடுவிக்கவும் குணமாக்கவும் அரசு திட்டங்களைத் தீட்டி ஆக வேண்டியது கட்டாய மாகும் . ●


## முற்றம் இதழுக்கான விளம்பரக் கட்டணங்கள்

பின்னட்டை பல வண்ணம் ரூ. 10,000/-
பின் உள் அட்டை பல வண்ணம் ரூ. 7,000/-
கருப்பு வெள்ளை முழுபக்கம் ரூ. 5,000/-
கருப்பு வெள்ளை அரைப் பக்கம் ரூ. 2500/-
க. வெ. கால் பக்கம் ரூ. 1500/-

சந்தா விவரம்: தனி இதழ் ரூ. 10/-
ஆண்டு சந்தா ரூ. 120/-

# நடிப்பிசைப் புலவர்
# கு. இரா. இராமசாமி (K.R.R)
# நூற்றாண்டு நிறைவு

பொன்.ஏழுமலை



“நண்பர் கே. ஆர். இராமசாமி கலை உலகில் ஒரு கருவூலம். காசுக்காக மட்டுமே நடிக்காத ஒரு கடமை வீரர். உலகம் பிளந்து விழ நேர்ந்தாலும் நெஞ்சம் குலையாத கொள்கைத் தங்கம். தந்தை பெரியாரின் பாசறையிலே எழுத்தாளனாக, பேச்சாளனாக இருந்த என்னை, முதன் முதலில் கலை உலகம் பற்றியும் சிந்திக்கத் தூண்டியவர் நடிகமணி டி.வி.நாராயணசாமி. அந்த கலை ஆர்வம் காய்த்திடவும் கனிந்திடவும் எனக்கு ஊக்க மூட்டி உதவி வருபவர் கே. ஆர். இராமசாமி. நடிகவேள் எம். ஆர். ராதாவும் கே. ஆர். ஆரும் டி. வி. நாராய ணசாமியும் நம் இயக்க எழுச் சிக்காக ஆற்றிவரும் கலைப்பணிகள் என்றென் றும் போற்றத் தக்கவை.

“ஓர் இரவு” நாடகம் எழுச்சிப் புயலாக வீசி வருகிறது. அதன் வெற்றிக்கு வித்து என்னுடைய கதைதான் என்றாலும் அது முளைத்துச் செழித்திட வேரானவர் நீரானவர் கே. ஆர். இராம சாமிதான். அவர் ஓர் இரக்கச்சுனை ஈகை மழை! தனிப்பட்ட முறையில் இன்று என் பொருளாதாரக் கவலை களுக்கு அவர் ஒரு சுமை தாங்கி” அறிஞர் அண்ணா, 1945 ஆம் ஆண்டில் தஞ்சை இராமநாதன் கலையரங்களில் நடைபெற்ற “ஓர் இரவு” நாடக விழாவில் ஆற்றிய உரை.

திரு. காளி என். ரத்தினம், அவ்வை தி. க. சண்முகம் ஆகிய இருவரையும் நடிப்புலக ஆசான்களாக ஏற்ற அவர், கலையுலக வழிகாட்டியாக கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனை ஏற்றுக் கொண்டதோடு, அவரின் ஈகைக் குணத்திற்கும் வாரிசாக விளங்கினார். அவர் தனது அரசியல் வழி காட்டியாக ஏற்றது அறிஞர் அண் ணாவையே. திராவிட முன்னேற்றக் கழகத்தில் பொதுக்குழு உறுப்பினரான கே. ஆர். ஆர், பேரறிஞர் அண்ணாவின் முயற்சி யால், தமிழக சட்டமன்ற மேலவை

உறுப்பினராக, திரு. வி. கே. இராமசாமி முதலியாரின் ஆதரவோடு, 1960 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப் பட்டார். தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் இணைச் செயலாளர், திரைப்படத் தேர்வுக்குழு உறுப்பினர் என பல பதவிகள் வகித்தார். இருபது படங்களில் கதாநாயகனாகவும், அய்ந்து படங்களில் துணை வேடத்திலும் நடித்த கே. ஆர். ஆர் மக்களால் பெரிதும் ஏற்றுக் கொள்ளப்பட்டார். தான் ஈட்டிய பணத்தை, தி. மு. கவுக்காகவும் மக்கள் பணிக்காகவும் செலவிட்ட அவர் தனது குடும்பத் தைப் பற்றி அக்கறை கொள்ளாதிருந்தது அன்றைய கால கட்டத்தில் அரசியல் அந்த அளவுக்கு தூய்மை யானதாக, அர்ப்பணிப்பு மிக்கதாக இருந்திருக்கிறது என்பதை (தற்போதைய சூழலை எண்ணிப் பார்த்தால்) வரும் தலைமுறையினர் நம்பவே மறுப்பர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றல் மிகு தலைவர் அண்ணாவின் செயலுக்கு உற்ற துணை யாய் விளங்கிய திரு. கே. ஆர். ஆரின் நூற்றாண்டு நிறைவுறும் வேளையில் தி. மு. க. அவருக்கு உரிய விதத்தில் விழா எடுக்காதது மிகுந்த வருத்த மளிக்கிறது. 1967ஆம் ஆண்டு தொடங்கி இன்று வரை, நாற்பத்தியேழு ஆண்டுகள் திராவிட இயக் கங்களின் ஆட்சி நடைபெற கால்கோள் நிகழ்த்திய மாமனிதர், மனிதகுல மாணிக்கம் கே. ஆர். ஆர் நூற்றாண்டு நிறைவு சிறப்பாக கொண்டாடப் படவில்லை என்பது அவலமே.

“பேரறிஞர் அண்ணா, அமைதியான சூழலில் எழுத வேண்டுமெனில் எங்களது வீட்டிற்கு வந்து தங்குவார். அவர் கூறுவதை திரு. சி. வி. இராச கோபால் எழுதுவார். நானும் அவ்வாறு எழுதியிருக் கிறேன். வெளிநாடு சென்ற அண்ணா ஜப்பான் ஆயத்த ஆடை வாங்கி வந்து எனக்குப் பரிசளித்தார். தந்தை பெரியாரின் மகிழுந்து ஒரு முறை பழுதான போது, அவ்வழியே வந்த எனது தந்தை, தனது மகிழுந்தைக் கொடுத்து உதவினார். அதற்காக நன்றி தெரிவிக்க தந்தை பெரியார் (எனது தந்தையின் மறுப்பைப் புறந்தள்ளி) எங்களது வீட்டிற்கு நேரில் வந்து நன்றி கூறினார்.“ திருமதி கலைச்செல்வி, (கே. ஆர். ஆரின்) ஒரே மகள்: இவர் என். எஸ். கே வின் மருமகளுமாவார். என்.எஸ்.கே, கே.ஆர்.ஆர் என்ற இந்த வள்ளல்களின் பேத்தி என்.எஸ்.கே. ரம்யா தற்போது திரைப்படங்களில் பாடகியாக புகழ் பெற்று வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

“அன்றைய கால கட்டத்தில் தனது நாடகங் களின் விளம்பரச் சுவரொட்டிகளில் “அறிஞர்” அண்ணா என அடை மொழியிட்டு அழைத்த பெருமை கே. ஆர். ஆருக்கே சாரும்” எஸ். பி. முத்து ராமன் (திரைப்பட இயக்குநர்)

“சட்டமேலவை உறுப்பினராக திரு. கே. ஆர். இராமசாமி இருந்தபோது ஒருவர் நற்சான்றிதழ் ஆங்கிலத்தில் கேட்டபோது, அதற்கு மறுத்த, தானறிந்த தனது தாய்மொழி தமிழ் மொழியி லேயே கொடுப்பேன் என்று கூறினார். இது அவரது தமிழ்ப்பற்றை பறைசாற்றுகிறது.“ ... திரு. க. திருநாவுக்கரசு (திராவிட இயக்க எழுத்தாளர்.)

“பெரிய மனிதர்களில் உயர்ந்த உள்ளம் கொண்டவர் தந்தை பெரியார் ஒருவரே. அன்புக்கும் நட்புக்கும் இணையாக கே. ஆர். இராமசாமி ஒருவரைத்தான் கூறமுடியும்.“ தி. க. முத்துசாமி (டி. கே. எஸ். நாடகக்குழு)

“அவர் நல்லவர், கள்ளமில்லாத சிறு குழந்தை யின் உள்ளம் படைத்தவர். பிறர் பற்றி வீம்பு பேசாதவர். பிறருக்கு மனதாலும் தீங்கு நினைக் காதவர்.“ திரு. ஏ. எஸ். ஏ. சாமி (திரைப்பட இயக்கு நர்)

“திரு. கே. ஆர். ஆர். நடிப்பிசைப்புலவர். ஆழ் கடல் போல அமைதியானவர். நாடக உலகின் உதயசூரியன். காரி, பாரி போன்று கொடைத்தன்மை உடையவர். தன்னிகரற்ற தமிழர், புத்துலகைச் சமமாக்கப் பாடுபட்ட புரட்சிக்கனல், அண்ணா கண்டெடுத்த ஆனிமுத்து, தனக்கென வாழாப் பிறர்க்கென வாழ்ந்த மாமனிதர் என்று கூறுவது, சூரியனைச் சுட்டி இது சூரியன் என அறிமுகப் படுத்தவது போன்றதாகும். திரு. சி. வி. இராச கோபால், ச. ம. மேலவை உறுப்பினர்.

“சினிமாவைப் பணம் சம்பாதிப்பதற்காகப் பயன்படுத்தி, கிடைத்த பணத்தை, நாடகக் கலைஞர் களுக்கும் கழகத்தை (தி. மு. க) வளர்ப்பதற்குமே வாரி வழங்கினார் கே. ஆர். ஆர்.” சொல்லின் செல்வர் ஈ. வே. கி. சம்பத்.

“தன்னலம் துறந்து, கழகத்தின் வளர்ச்சியைப் பெரிதென மதித்த பெருங்கலைஞர் கே. ஆர். ஆர். நடிப்புத் திறனும் இசைப்புலமையும் வாய்க்கப் பெற்ற அவருக்கு கழகத்தின் சார்பில் நான் அளித்த நடிப்பிசைப் புலவர் என்ற சிறப்பினுக்கு உரியவ ராகவே இறுதி வரையில் வாழ்ந்தார்.“ திரு. நாவலர். இரா. நெடுஞ்செழியன்.



“அவருக்கு வயது 11, எனக்கு வயது 8, ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் வேலை பார்த்தோம். பழகுவதற்கு இனியவர். திரு. கே. ஆர். ஆர். தன்னிடமில்லாத போது கூட கடன் வாங்கி மற்றவர் களுக்கு உதவுவார். பகுத்தறிவு நாடகங்களை நடத்த முடியாத சூழல் இருந்தபோது துணிவுடன் அதனை நடத்திக் காட்டியவர் கே. ஆர். ஆர். தன்னலம் துறந்து கலையும் நாடும் மேம்பட பாடுபட்டவர் கே. ஆர். ஆர். அண்ணா போன்றவர்களை மக்கள் ஏற்றுக்கொள்ளாத அந்தக் காலத்தில் அண்ணா வின் நாடகங்களை நடத்திக் காட்டியவர் கே. ஆர். ஆர். அவர் எங்களுக்கெல்லாம் முன்னோடி ... திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.

“எதிர்பார்ப்பையும் வியக்கவைத்து, பலவகைக் கருத்து வளமும் சுவை நலமும் குழைத்துக் கொடுத்துக் கவர்ந்து ஈர்த்து, தன் வயப்படுத்துகிறதே இதுதான் கலை உலகம். இந்த கலை உலகம் தென்னகத்திலே இன்று உயிருடன் வாழ்கிற தென்றால் அதற்கு அண்ணாதான் காரணம். அண்ணா இல்லையேல் நாம் இல்லை. நாடு இல்லை. மொழி இல்லை, கலை இல்லை. அத்தகைய ஒரு கருத்துச் சிற்பியைத் தலைவராகப் பெற்ற நாம் பிறவிப்பயனை அடைகிறோம்.“ அண்ணாவும் கலையுலகும் என்பது பற்றி ஒரு கட்டுரை பர்மா எம். ஜி. ஆர். மன்றத்தினர் கேட்க, திரு. கே. ஆர். ஆர். எழுதியது. அண்ணாவைப் பற்றிய புரிதல் கே. ஆர். இராமசாமியின் அறிவின் மேன்மையை மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

“பணத்தையும் புகழையும் விட்டுக் கொடுக்க உன்னைத்தவிர வேறு யாரும் முன் வரமாட்டார்கள். உன் பெருந்தன்மையைப் பாராட்டு கிறேன். இதை உன்னைத்தவிர எவனும் சொல்ல மாட்டான்.“ கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் (பராசக்தி படத்தில் கே. ஆர். ஆர். நடிக்க மறுத்து, சிவாஜி கணேசன் நடிக்க வழிவகுத்தார். அண்ணா வின் சொற்படி)

காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த எஸ். டி. சுந்தரத்தின் மகள் திருமணம், பணம் காரணமாக தடை பட்டபோது, திரு. கே. ஆர். இராமசாமி தன்னால் இயலாத நிலையில், திரு. எம். ஜி. ஆர். அவர்களை அணுகி உதவச் செய்தார். கட்சி மாச்சரிய மற்றவர் கே. ஆர். ஆர்.

“அக்காலத்தில் எம். ஜி. ஆர். தனது பெயரை எம். ஜி. ராமச்சந்தர் என்றே வைத்திருந்தார். என்னய்யா அதென்ன ராமசந்தர், ராமச்சந்திரன்னு அழகான தமிழில் எழுதுங்களேன் என்று கே. ஆர். இராமசாமி கூறியதன் பேரிலேயே எம். ஜி. ஆர், எம். ஜி. இராமச்சந்திரன் என்று மாற்றினார்.

திரு. கே. ஆர். ஆர் அவர்களுக்கும் அண்ணாவைப் போன்றே உணவுக் குழாயில் புற்றுநோய் ஏற்பட்டது. மருத்துவமனையிலிருந்த கே. ஆர். ஆரை (அவர் இறப்பதற்கு மூன்று நாள்கள் முன்னர்) டி. கே. சண்முகம், டி. கே. பகவதி, டி. கே. முத்துசாமி ஆகிய மூன்று உடன்பிறந்தோரும் பார்க்க வந்தனர். அவர்களிடம் திரு. கே. ஆர். ஆர் கூறியது: “இந்த நோய் மிகவும் கொடியதாக இருக்கிறது. இந்த வேதனையை அண்ணா எப்படித் தான் தாங்கினாரோ.“ அண்ணாவின் மீதான அவரது பற்றை அறுதியிட்டுச் சொல்ல முடியாது என்பதனையே திரு. கே. ஆர். ஆரின் கூற்று தெளிவாக வெளிப்படுத்துகிறது.

திரு. கே. ஆர். ஆர் இன் புகழ் ஓங்கவும் தமிழ் நாடு நலம் பெறவும் அவரது வழியில் நாமும் உழைப்போம்!

**பொன். ஏழுமலை** மின்பொறிஞர்/சமூக ஆர்வலர்
பேசி: 94458 72285
மின்அஞ்சல்: Elumalaip1951@yahoo.com

# ஆனந்தமாய்ப் பாட்டிசைப்போம்

தலைவன் வழி அறத்து மொழி
தமிழை இனி அழிக்கவரும்
பகையை இனி அழித்து விடு

பறை இனிது அடித்துவிடு
பழந்த தமிழும் பழம் புலமும்
பழந்த தமிழன் இனிதெமக்கே

நிமிர்ந்தெழுந்து நேர்நடுவே
விழிமடலை திறந்து எரி
தலைவன் புலம் ஈழ நிலம்
எமக்கினிது வழக்கை முடி

சிறகைவிரி சிதறிவிழ
பகை முழுதும் சரிந்துவிழ
பனை நிலமோ திமிரில் எழ
கணக்கை முடி

உரைக்கும் மொழி
நெருப்பின் வரி
நிலைக்கும் அவை
நம்பி நட

உரத்து ஒரு குரலை இடு
உனக்கு ஒரு பொறியை எடு
ஊர் நிலத்து மடியில் இரு
உனது நிலப் பகையை முடி

கலைந்த குடி முளைத்து எழ
அழிந்த நிலம் உழுது தர
இயன்றவரை உழைத்துவிடு

வாழ்வுரை
வழங்கும் அவன் இளங்கரத்தை
எழுந்து பிடி

வழி தெரியும்
விழி எரியும்
வாழ்ந்த புலப்பனை நிமிரும்
புலிப்படையின் பலம் புரியும்
கிளர்ந்து நிமிர்
உடைந்து விழும் தென்னிலங்கை

நடந்துமுடி
தலைவன் விழி இனிதெமக்கு
தரணியிலே அமிழ்தெமக்கு
எழுந்துபிடி

இடிந்து விழும் எழுந்த பகை
நொருங்கிவிடும் பகைவன் குகை
உந்தன் புலம்
உனக்கு ஒரு வரி எழுதும்

குலத்தின் நெறி குனிந்ததில்லை
குவலயத்தில் பணிந்ததில்லை
களத்தில் குதி
கிழக்கின் ஒளி வெளுத்து வரும்

வாழ்விழந்தோம் விழுதறிந்த மரமிழந்தோம்
நிழலிழந்தோம் நீள்வானிழந்தோம்
நெஞ்சிரங்கோம்

நிமிர்ந்தெழுந்து தோளைவிரி
நாயகனின் வழி இருக்கு
நின்று எரி
பகை முழுதும் எரித்து முடி
பறந்து திரி
புது யுகத்தில் காற்று வர
சுழன்று எழு
தலைவனது பார்வையிலே
எழுந்து வரும் தீப்பொறியாய்.

கோதிவிடு கேசமதை
காற்றிலதை ஆடவிடு
ஆணவமாய் நீயுமிரு
பிரபாகரன் நிழல் இருக்கு
துணை பிடித்துத் துணிந்து நட
தணல் உனக்குத் தண்மையடா
தீயின் குணம் இன்பமடா

வாழ்வுயர வழங்கும் அவன்
இளங்கரத்தை எழுந்து பிடி
காலையிலே வந்து நிற்பான்
குறு நிலத்துப் பெருந்தலைவன்

அண்ணன் வழி இனிதெமக்கு
அள்ளி எடு
ஆனந்தமாய் பாட்டிசைப்போம்.

**தரா கார்த்திகை.**

# தெரிந்து கொள்வோம்

உமா மகேசுவரி

மார்க்கப்போலோ என்கிற சிகரெட் நிறுவனத் தின் முதல் உரிமையாளர் நுரையீரல் புற்று நோய் தாக்கி இறந்துப் போனார்.

பழ மரங்களில் நீண்ட காலம் விளைச்சல் தருவது ஆரஞ்சு மரம். சுமார் 400 ஆண்டுகளாக தொடர்ந்து அது விளைச்சல் தரும்.

உலகிலேயே மிக சிறிய மரம் குட்டை வில்லோ மரம். அதன் உயரம் இரண்டே அங்குலம் தான்.

மனித உடல்களில் சுமர் 6 கோடியே 50 லட்சம் செல்கள் இருக்கின்றன.

பொதுவாக தாவரங்கள் நகராது. ஆனால் கிலாமிடோமொனாஸ் என்ற ஒரு செல் தாவரம் நகர்ந்து போகும் தன்மை உடையது.

பச்சோந்தியின் நாக்கு தன் உடலில் நீளத்தை விட இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும்.

நாக்கை நீட்ட முடியாத ஒரே விலங்கு முதலை

நீல திமிங்கலத்தின் எடை 22 யானைகளின் எடைக்குச் சமம். அதன் இதயம் ஒரு சிறிய கார் அளவில் இருக்கும்.

ஒரு புள்ளி அளவு இடத்தை 70,000 (எழுப தாயிரம்) அமிபாக்களால் நிரப்ப முடியும்.

தரையில் முதுகுபடும்படி உறங்கும் உரே உயிரினம் மனிதன்.

முன்னால், பின்னால், பக்கவாட்டில் என அனைத்துப் பக்கங்களிலும் பறக்க முடிந்த பறவை தேன்சிட்டு

தேன்சிட்டு, மரங்கொத்தி போன்ற பறவை களுக்கு நடக்கத் தெரியாது.

மனித உடலில் மட்டும் 17,000 வகை நுண் கிருமிகள் வாழ்கின்றன.

புற்றுநோய் உட்பட எந்த நோயுமே வராத ஒரே உயிரினம் சுறாமீன்

நீந்துவதை நிறுத்தினால் உடனே இறந்துவிடும் ஒரே மீன் சுறாமீன்



தயிராக மாற்ற முடியாத ஒரே பால் ஒட்டகப்பால்

ஒட்டகத்தை விட அதிக நாட்கள் தண்ணீர் இன்றி வாழும் ஒரு உயிரினம் கங்காரு எலி

துருவக் கரடிகள் அனைத்துமே இடது கை பழக்கம் உடையவை.

பின்புறமாக மரம் ஏறும் விலங்கு கரடி.

ஒரு மோட்டார் வாகனத்தில் 30 சதவீதம் எரிபொருள் மட்டும் தான் வண்டி ஓடுவதற்கு பயன்படுகிறது. மீதமுள்ள 70 சதவீதம் எரிபொருள் கார்பன் மோனோ ஆக்சைடு என்கிற ஒரு நச்சு வாயுவாகத்தான் வெளியேறுகிறது.

சீனாவில் ஒரு மனிதனின் பிறந்தநாள் அவன் தாய் வயிற்று கருவில் உருவாகும் நாளில் இருந்தே கணக்கிடப்படுகிறது.

ஆக்டோபஸ்க்கு மூன்று இதயம் இருக்கும் அதன் ரத்தம் நீல நிறத்தில் இருக்கும்.

குரங்குகளுக்கு இரண்டு மூளை இருக்கிறது.

சூரியனின் வயது 470 கோடி ஆண்டுகள் (2010 ஆண்டு வரை). பூமியின் மீது காணப்படும் பழைய பாறைகளைக் கொண்டு இதை கணக்கிட்டுள்ள னர்.

சுகப்பிரசவம் இல்லாமல் தன் தாயின் வயிற்றில் இருந்து கிழித்து வெளியே எடுக்கப்பட்டவர் ஜூலியஸ் சீசர். அதனால்தான் இந்த முறைக்கு சீசரியன் என்று பெயர் வந்தது.

பிறந்து ஆறு முதல் எட்டு வாரங்கள் வரை குழந்தைகள் அழுதால் கண்ணீர் வராது.

நான்கு வயது குழந்தைகள் ஒரு நாளைக்கு சுமார் 400 கேள்விகள் கேட்கும்.

நாம் நேற்று கட்டிய பள்ளிக்கூடங்கள் எல்லாம் இன்று விரிசல் விழும் நிலையில் இருக்க ஷி ஹூவாங் என்பரின் ஆட்சி காலத்தில் சின பெருஞ்சுவர் கி.மு.200 களில் கட்டடப்பட்டது.

தைவான் நாட்டில் உள்ள மூன்யூச் மரம் 4120 ஆண்டுகள் பழைமையானவை.

காட்டுக்கே ராஜா என்று சொல்லும் விலங்கு சிங்கம் ஆனால் அதன் ஆயுட்காலம் 15 ஆண்டு கள்தான். வயிறு நிரம்பி இருந்தால்தான் சிங்கம் கர்ஜிக்கும்.

மிகச் சிறிய இதயம் கொண்ட விலங்கு சிங்கம்

லங்கா வீரன் சுத்ரா என்ற மத நூல் முழுவதும் ரத்தத்தால் எழுதப்பட்டது.

தன் காதை (காது) நாக்கால் தொடும் ஒரே விலங்கு ஒட்டகம்.

இலைகள் உதிர்க்காத மரம் ஊசி இலை மரம்.

காட்டு வாத்து கருப்பு நிறத்தில்தான் முட்டை யிடும்.

குளிர் காலத்தில் குயில் கூவாது.

எடிசன் தன் வாழ்நாளில் மொத்தம் 1368 கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளார். அவர் மூன்று மாதங்கள் மட்டுமே பள்ளிக்கூடம் சென்றவர்.

லியான்னடோ டாவின்சி ஒரு கையால் எழுதிக் கொண்டே மறுகையால் படம் வரையும் திறன் உடையவர். அவர் வரைந்த உலகப்புகழ் பெற்ற மோனாலிச ஓவியம் இடது கையால் வரையப் பட்டது.

கரப்பான்பூச்சி தலையை வெட்டி எறிந்தாலும், அது தலை இன்றி ஒன்பது நாள் வரை உயிர்வாழும், ஒன்பதாவது நாளின் இறுதியில் அது பசியால் தான் இறந்து போகும்.

கிளியும் முயலும் தன் பின்னால் இருப்பதை தலையை திருப்பாமலே கண்டுபிடித்துவிடும்.

யானையின் கால் தடத்தின் நீளம் அளந்து அதை ஆறால் பெருக்கி வரும் விடையே யானையின் உயரம்.

கருவில் முதன் முதலில் உருவாகும் உறுப்பு இதயம்

மனிதன் இறந்து போனதும் முதலில் செய லிழக்கும் உறுப்பு இதயம்

1610 ஆம் ஆண்டு அமெரிக்க மக்கள் தொகை வெறும் 310 பேர் தான்.

ஒரு ஆண்டு ஆணாகவும் அடுத்த ஆண்டு பெண்ணாகவும் மாறும் உயிரினம் ஈரிதழ்சிட்டு

வால்டிஷ்னி மொத்தம் 32 ஆஸ்கார் விருதுகளைப் பெற்றுள்ளார்.

ஒருதலைமுறை என்பது 33 ஆண்டுகள்.

பெரியார் பொதுக்கூட்டங்களில் மாநாடுகளில் சுமார் 21400 மணிநேரம் பேசியுள்ளார். அவருடைய சொற்பொழிவை ஒலிநாடாவில் பதிவு செய்தால் 2 ஆண்டுகள் 5 மாதங்கள் 11 நாட்கள் வரை தொடர்ந்து ஒலிபரப்பாகும்.

ஒட்டகம் ஒரே சமயத்தில் 90 லிட்டர் தண்ணீரை குடிக்கும் ஆனால் ஒட்டகத்திற்கு தண்ணீரில் நீந்தத் தெரியாது.

தத்துவம் பயின்று ஆன்மீகவாதியான பிறகுதான் கராத்தே வீரர் ஆனார் புருஸ்லீ

சுவாரின் என்ற ஆஸ்திரேலிய நாட்டுப் பறவை குளிக்காமல் தன் கூட்டுக்குள் நுழையாது.

விமானத்தில் இருக்கும் கருப்புப் பெட்டி ஆரஞ்சு நிறத்தில் இருக்கும்.

சில்வண்டுகள் 17 ஆண்டுகள் தூங்கும்

யானை குதிரை நின்று கொண்டே தூங்கும்

நீர் நாய் ஒன்றரை நிமிடம் மட்டுமே தூங்கும்

டால்பின் ஒரு கண் விழித்தே தூங்கும்

புழுக்களுக்கு தூக்கம் கிடையாது.

நாம் இறந்து பிறகும் நமது கண்கள் 6 மணி நேரம் பார்க்கும் தன்மையுடையது.

## மருத்துவக் குறிப்புகள்

• நெல்லி வற்றல்– சந்தனத்தூள்– கொத்தமல்லி மூன்றையும் தண்ணீரில் ஊற வைத்தபின் வடிகட்டி அந்த நீரை அருந்தி வந்தால் தலை சுற்றல், கிறுகிறுப்பு முதலியன குறையும்.

• வெல்லத்தை கெட்டியாகப் பாகு வைத்து அதில் மிளகை ஒன்றிரண்டாகப் பொடித்துப் போட்டு உருட்டி வைத்தால் இருமல் வரும்போது வாயில் அடக்கிக் கொள்ள இருமல் நிற்கும்.

• மண் சட்டியில் உப்பை வறுத்துத் துணியில் கட்டி உப்பு ஒத்தடம் இரண்டு மூன்று வேளை கொடுத்தால் கழுத்து வலி நீங்கிவிடும்.

• வயலட் நிறமுள்ள பிஞ்சு கத்தரிக்காய், கருஞ்சிவப்பு நிறமுள்ள பசலைக் கீரை, சிவப்பு பொன்னாங்கண்ணிக் கீரை இவற்றில் அயோடின் சத்து அதிகம் உள்ளது. இவற்றை அதிகமாகக் குழையவிடாமல் சாப்பிட்டு வர சிறுநீர் போகும்போது ஏற்படும் எரிச்சல் நீங்கிவிடும்.

• நூல்கோலைத் துருவி ஊறவைத்து பயத்தம் பருப்பு கலந்து உப்பு பிசறி எலுமிச்சைச்சாறு பிழிந்து சாப்பிட்டால் சர்க்கரை நோய்க்கு அருமருந்தாகும்.

• தேங்காய் எண்ணெயை மிதமான தீயில் வைத்துக் காய்ந்ததும் வேப்பிலையைப் போட்டு பொரித்து எடுத்துவிடவும். கொத்தாகக்கூடப் போடலாம். பிறகு இறக்கி வைத்துக் கொஞ்சம் வெந்தயம் போட்டு மூடிவைக்கவும். இந்த எண்ணெய்யைத் தலையில் தடவிவந்தால் வெயிலால் வரும் உடல் சூடு குறையும். வெப்ப நோய்கள் தாக்காது.

• வயிற்றில் பிரச்னை ஏற்பட்டால் கொஞ்சம் சீரகத்தை எடுத்து கொதிநீரில் போட்டு கஷாயமாக இரண்டு வேளை குடித்து வர நிவாரணம் கிடைக்கும்.

• மாதுளைச் சாறு தினமும் குடித்து வந்தால் ரத்த அழுத்தம், கொழுப்பு, நச்சுத்தன்மை என பல பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

• பொடி செய்த ஓமத்தை பாலில் கலந்து வடிகட்டி படுக்கும் முன் குழந்தைகளுக்குக் கொடுத்தால் சளியை தூர விரட்டும்.

• திராட்சையை பன்னீரில் ஊறவைத்துச் சாப்பிட்டால் இதயம் பலம் பெறும். தொடர்ந்து திராட்சை உண்பவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி நிச்சயம்.

• குழந்தைகள் ஞாபகசக்தியுடன் இருக்க வேண்டுமானால் தினமும் காலை உணவுக்குப் பின் வெந்நீரில் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து குடிக்க வையுங்கள்.

• சின்ன வெங்காயத்தை சிறிது எண்ணெய்விட்டு வதக்கவும். வெறும் வயிற்றில் தினமும் ஐந்தாறு என்ற கணக்கில் இரண்டு வாரங்கள் சாப்பிட்டு வர நரம்புத் தளர்ச்சி குணமாகும். உடலும் குளிர்ச்சியடையும்.

## சிறுகதை



**த**னது தாய்மண் முன்னைப்போல் வாழ வேண்டும் என்ற பேரவாவால், தமிழ்மண் பற்றுக் கொண்ட, பனங்கானியின் மேல் உயிரை வைத்துள்ள உண்மைத் தமிழரால் எழுதப்பட்ட கதை இது. (ஆசிரியர்.)

கடும் புயல் எழுந்து தென்னாப்பிரிக்க வெளியைப் புரட்டிப் போட்டதுபோல், வெம்பியாரக் காற்றில் கடுந் தீயெழுந்து, கிழக்குத் தீமோர் பிளந்து, அப்பால் நிமிர்ந்த பச்சைப் புல் நுனிபோல், சுட்டெரித்து சூடான் நிலம் உடைந்து இரண்டாகப் பிரிந்ததற்கப் பால் பெய்த மழைத் தூறல்கள் நடுவே அழகாய் எழுந்த காலிப்பை போல, கண்டிப்பாக இங்கு நிகழும். இல்லையா நாவல் மரமே! ஆம் அப்பு அது நிகழும். அதில் உனக்கென்ன சந்தேகம்?.

நிம்மதி இழந்துபோன என் முற்றத்தில் மறுபடியும் செவ்வருத்தையும் மணிவாழையும் மேட்டுக்கரையில் கம்பீரமாய் பனைமரமும் கொய்யாவும் நிமிரும். அதிலே தூக்கணாங் குருவிகள் கூடும். கூடிக் கூடமைத்துக் கொள்ளும். கும்மிப்பாட்டிசைக்கும். இல்லையா நாவல் மரமே. ஆம் அப்பு நிகழும் அது நிகழும், அது கண்டிப்பாக நிகழ்ந்துவிடும்.

நீண்ட தூரத்துக்கப்பால் கொடுங்கோல் பிடித்துக் கூத்தாடிய கோடை காலத்தை விரட்டி கருமேகங்கள் கூடி காத்திரப்பட்டதன்பின்பு, கொசோவோவில் மழை பெய்யவில்லையா? மண்ணில் அழகாய் எழுந்து பாரைப் பிளந்து ஒரு அழகிய பச்சைக்கொடி படரவில்லையா? அது நிகழும் விரைவாய் பெருங்காற் றெழுந்து அது நிகழும். வருத்தப்படாதே, வா... உட்காரு கொஞ்சம் காற்று வாங்கு. வரம்பு உடைந்துபோனால் மறு படியும் அதனை அமைக்க வேண்டும். வாய்க் காலில் நீர் ஓட ஒடையும் அமைக்கவேண்டும். நம்பிக்கை யோடு பார் பிளந்த நிலத்தை உழுவதற்குத் தயார் ஆகிவிட்டாய். உழவுக்காக உன்வயல் காத்துக் கிடக் கிறது. உரிமையோடு பார்த்திருக்கிறது. பயிரைச் சுமப்பதற்கு வயல் தயாராகிவிட்டது.

# அத்திவாரம்

கூளாமரம் எரிந்து விட்டது என்று, கவலைப் படாதே பாவையும் நானும் உனக்காகக் காத்திருக் கிறோம். நிழலும் நிழலுக்காப்பால் நிமிரும் வான் ஓடையும், சூரியனும் உன் உழவுக்காகக் காத்திருக்கு. உன் உழவெழும் போது மைனாக்கல் கூடும். இன்னும் குருகுகள் கூட்டமாகக் கூடும். அப்போது உன் வாழ்வு முடிந்து நம்பிக்கையோடு நெற்பயிர்கள் உயிர்ப்போடு கூடிக்குலவும். குளிர்க்காற்றில் மெல்லிய பயிர் மடல்கள் கையசைக்கும்.

கண்ணைத் துடைத்துக்கொள். இன்னும் கானாவைப் பற்றி எண்ணி கவலைப்படாதே, அவளைக் காத்திரப்படுத்து. உன்னோடு வைத்துக் கொள். அதோ தெரிகிறதே உன் முற்றம் அங்கெல் லாம் அழகிய மணிவாழை பூத்து பச்சை விரிக்கும். அப்பால் செவ்வருத்தை செங்கோல் பிடித்து செழித்து முற்றம் முழுதும் காத்திருக்கும். கனாக் காணும். கானா வந்து பறிப்பதற்கு கனாக்காணும்.

காலிப்பு எழுமுந்தி கானா எழுந்துவிடுவாள். நீண்ட கரிய கூந்தலைப் பிடித்து முடிந்தபடி பூக்கல் கொஞ்சம் பறித்துக் கொண்டு புன்னகையோடு புறப்படுவாள். வேப்பமர வைரவருக்குச் சாத்திவிட்டு, கொய்யாவில் கட்டியிருக்கும் கன்றுக்குட்டியைத் தடவி அழகாய் ஒரு முத்தமிடுவாள். இல்லையா அப்பு! ஆம் நாவல் மரமே அது அப்படியே இன்னும் எனக்கு நினைவிருக்கிறது. அந்தக் காலை, அந்த பரபரப்பான பொழுது, பனைக்கு மேலால் எழும் காலிப்பு. கானாவின் மெல்லிய புன்னகை எல்லாமே, எல்லாமேதான்.

வைக்கோல், வாழை, தென்னை, தென்னை யோலை, கிடுகு, கிடுகால் வேயப்பட்ட குட்டிவீடு, நீண்டதாய் அழகாய் ஒரு சாளரம், அப்பால் மெலிதாய் எழும் வயற்காற்று அதிலே எழும் சுகந்த வாசம் இவையெல்லாம் எனக்கு வேண்டும் என்பாள்.

நீரோடும் சத்தம் சலசலத்து எழ வேண்டும். அப்பால் தூரத்தே எழும் கோவில் மணியோசை, குயிலின் கூவல், செண்பகத்தின் அந்தக் குறுகுறுப்பு எல்லாமே வேண்டும் என்பாள்.

அப்பால் நீண்டு சாய்ந்திருக்கும் ஒரு சாய்மனைக் கதிரை, நிதானமான ஒரு இலாம்பு "மாசேதுங்கின்" அழகிய வரிகள் இல்லையேல் மரணத்துள் வாழ்வோம் என்னும் கவி வரிகள் அதற்கு அப்பால் மனிதமாடு என்னும் அழகிய நூல் இன்னும் எனக்கும் நினைவிருக்கும் றஞ்சகுமாரின் கோசலை என்னும் சிறுகதை அதற்கு அப்பால் எனது தேநீர்க்குவளை இவையெல்லாம் போதும் என்பாள்.

வைக்கோல் அவளுக்குப் பிடித்துப்போன ஒன்று. கோலி அள்ளி வெள்ளையனுக்கும் நீழக் கொம்பனுக்கும் போட்டபடி "வாழ்வைத் தந்த வைக்கோலே! என் வாசனை பிடிக்கும். உன்னால் வேயப்பட்ட வீடு பிடிக்கும். வைக்கோல் வீட்டோடு கூடிய திண்ணை பிடிக்கும். வைக்கோல் நுனியால் சிந்தும் மழைநீர் பிடிக்கும். வைக்கோலே எல்லாமே எல்லாமே பிடிக்கும் என்பாள்.

இரவு எழும் மெல்லிய நிலவொளியில் அர்த்தமாகப் பார்ப்பாள். அப்பால் நிதானமான புன்னகை. வெளியே செல்லும் அவளது பார்வை. சிறிது மௌனம், கொஞ்சம் இடைவெளி, அப்புறம் அடக்குமுறை பற்றிப் பேசுவாள். அதன் இருள் அதன் கொடுமை அதனால் மக்கள் படும் அவலம், அலங்கோலம் அதுபற்றிப் பேசுவாள்.

பாறாங்கல் தலையில் போடுவதுபோல் அப்புறம் ஏற்படும் வலிபோல் குடையுது என்பாள். இன்னும் இந்தக் கொடிய இருள் எழும். அப்பால் ஒவ்வொரு காலையும் பூக்குஞ்சின் சிறகொடிந்த மரணங்களை, மரணங்களால் ஏற்படும் வலிகளை எவ்வளவு காலந்தான் நீண்டு சுமந்து புலரும் என்பாள்.

எரிந்து கருகிப்போன கூடுகளும் தறிக்கப்பட்ட மரங்களும் நான் மண்ணில் காணக்கூடாது, காணவே கூடாது என்பாள். கண்டிப்பான அவளது குரலின் தொனி மெல்லிய அவளது அழகான புருவத்தின் விழி துரு துருவென்ற பார்வைக்கப்பால் ஓர் அர்த்தம் இருக்கும். அவளது பேச்சுக்கப்பால் ஒரு சுதந்திரக் காற்று எழுந்து வீசும். மென்மையாக அவளது விரலைப்போல வருடும். விழி மடல் விந்தையான படபடப்பு அழகிய விடியலின் பரபரப்பாகத் தோன்றும்.

சாளரம் வழியே நட்சத்திரங்களை இரசிப்பாள். கூரையின் நடுவே ஒரு சாளரம் வைத்தால் என்ன என்பாள். எதற்காக என்பேன். அப்போதுதான் நான் சுதந்திரமாகப் பார்க்க முடியும், வானை, நீந்தும் மேகங்களை. என்வீட்டில் இருந்து இரசிக்க முடியும் என்பாள்.

*அப்புறம்... அப்புறம்... என்ன நாவல் மரமே!*

*நம்பிக்கையோடு தொட்டிகளில் நீர் இறைப்பான் உளண்டிச்சத்தம் கேட்டு கறவைகள் ஓடி வரும். கன்றுகளும் கூட ஓடிவரும். நீர் குடிக்கப் பழகும். உறிஞ்சிக் குடிக்கும் சத்தம் எவ்வளவு இனிமை, எவ்வளவு அழகு இல்லையா என்பாள்.*

*வால்கள் அடித்து இலையான் விரட்டும் சத்தம் தனக்குப் பிடிக்கும் என்பாள். துள்ளி ஓடும் கன்றைப்பிடித்து ஒரு முத்தமிடுவள். வாளி, உளண்டி அதன் ஓசை அப்பால் கன்றின் துள்ளல், பசுவின் கதறல் அடடே எவ்வளவு சொர்க்கம். இதற்குமேல் என்ன வேண்டும் என்பாள்.*

*ஆனந்தமான எங்கள் முற்றத்தில் அரக்கத்தன மான இருள் வேண்டவே வேண்டாம் என்று அர்த்தப்பட கோபத்தோடு சொல்வாள். மெல்லிய அவளது உதடுகள் அர்த்தப்பட வைக்கும். அந்த இருளில் மின்னும் இலாம்பொளியில் மெய்சிலிர்க்க வைக்கும். ஏதோ ஒன்றை மெய்ப்பட வைக்கும்.*

*நாவல் மரமே! நம்பிக்கையான அவளது பயணத்தின்மீது எனக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது. அதோ அந்தப் பனைமரம். அப்பால், அப்பால்தான் அவளது புதைகுழி, அதன்மேல் நம்பிக்கைப் புற்கள் வளரத் தொடங்கிவிட்டன. அவளுக்குப் பிடித்த குட்டிவீடு. சின்னதாய் ஒரு சாளரம். அப்பால் மெலிதாய் அவளது விரலைப் போல் வருடும் மெல்லிய சுதந்திரக் காற்று நிச்சயம் எழும். உழவுக்கப்பால் நீண்ட நெற்கதிர்கள் நம்பிக்கையோடு எழும் நெல்மணியும் வைக்கோலும் நீள் வானின் கீழ் வாசனை வீசும்.*

*கொசோவோவில் கிழக்குத் தீமோரில் சூடானில் சுகந்தரும் புல்வெளி எழுந்து பச்சை விரித்தது போல் பனங்கானியிலும் அமையும். அப்பால் கானாவின் குறும்புப் பார்வை அவளது பரபரப்பு அவளது நீண்ட கேசம், அவளது சாய்மனைக் கதிரை, அவளுக்குப் பிடித்த இலாம்பு, உளண்டிச் சத்தம் எல்லாமே அமையும். இல்லையா நாவல் மரமே!*

*ஆம் அப்பு! நிகழும்! அது நிகழும்!! விரைவாய், சீக்கிரமாய் அது நிகழும்!!!.*

**– தரா கார்த்திகை.**

## உங்கள் செல்போன் எண் மறந்துவிட்டதா



செல்போன் வருவதற்கு முன்பு, பொதுவாக ஒருவர் அவருக்கு நெருங்கியவர்களின் தொலைபேசி எண்ணை நினைவில் வைத்திருப்பார். அவ்வாறு ஒருவருக்கு ஒரு சிலரது தொலைபேசி எண்களாவது நினைவில் இருக்கும்.

ஆனால், எப்போது லேண்ட் லைன் போன்களை கைவிட்டு நாம் செல்பேசிக்கு மாறினோமோ அப்போது விரல் நுனியில் இருந்த போன் எண்கள் எல்லாம் செல்போன் கீ போர்ட் நுனிக்கு சென்றுவிட்டது.

இதனால், தற்போது பெரும்பாலானோர் செல்போன் எண்களை நினைவில் வைத்துக் கொள்வதே இல்லை. சரி இதனால் என்ன? எப்போதும் செல்போனை கையிலேயே தானே வைத்திருக்கிறோம், தேவையானவர்களின் எண்ணை போனில் பார்த்துக் கொண்டால் போகிறது

சரி மற்றவர்களின் செல்போன் எண்ணை மறந்து விட்டால் செல்பேசியில் பார்த்துக் கொள்ளலாம். திடீரென ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் உங்கள் செல்போன் எண்ணே உங்களுக்கு மறந்துவிட்டால்..

அது எப்படி மறக்கும் என்று கேட்காமல் மறந்துவிட்டால் என்ன செய்வீர்கள் என்று யோசியுங்கள். சிரமமே இல்லை. ஒவ்வொரு செல்போன் சேவையும், உங்களது செல்போன் எண்ணை அறிந்து கொள்ள வசதி செய்துள்ளது.

அதனை அறிந்து கொள்ள..

Airtel சேவையை பயன்படுத்துபவர்கள் *282#

Aircel சேவையை பயன்படுத்துபவர்கள் *888# or *1#

Idea சேவையை பயன்படுத்துபவர்கள் *789# or *1#

Vodafone சேவையை பயன்படுத்துபவர்கள் *121*0#

Docomo சேவையை பயன்படுத்துபவர்கள் *1# ஷீக்ஷீ *580#

Reliance சேவையை பயன்படுத்துபவர்கள் *1#

Bsnl சேவையை பயன்படுத்துபவர்கள் *888#

# அடேங்கப்பா சிந்தனைகள்!



● டாக்டர் எனக்கு பல் ஆடுது!

எந்த பாட்டுக்கு?

● ஆஸ்பத்திரிக்கு எப்படி போகணும்?

நோயோடதான்!

● தாத்தா! இனிமே கம்ப்யூட்டர் படிச்சாதான் வேலை கிடைக்கும்!

அப்ப நீ படிச்சா கிடைக்காதா?

● டேய்! நாளைக்கு ஒரு பெண் பார்க்கப் போறேன்! நீயும் வந்துவிடு!

கண்டிப்பா! உனக்கு ஒரு கஷ்டம் என்றால் நான் சும்மா இருப்பேனா?

● டாக்டர்! தினமும் ஒரு பச்சை முட்டை சாப்பிட சொன்னீங்க! ஆனால் எங்கள் கோழி வெள்ளை முட்டைதான் போடுது! என்ன செய்ய?

● என் பூட்டை உடைத்து 5 லட்சம் கொள்ளை அடித்து விட்டார்கள்!

பூட்டுக்குள் எப்படிடா 5 லட்சம் வைத்திருந்தாய்?

● படிச்சி முடிச்சப்புறம் என்ன செய்ய போறே?

புக்கை மூடிடுவேன்

● காலில் என்ன காயம்?

செருப்பு கடித்து விட்டது

பின்ன, அதை மிதிச்சா அது சும்மா இருக்குமா!

● குளிச்ச பிறகு எதுக்கு தலையைத் துவட்டுறோம்?

குளிக்கும் போதே துவட்ட முடியாதே!

● இரண்டு இட்லியைக்கூட முழுசா சாப்பிட முடியல டாக்டர்?

என்னாலையும் முழுசா இரண்டு இட்லி சாப்பிட முடியாது, புட்டு புட்டுதான் சாப்பிடணும்!

● டேய்! ஒரு 10 ரூபாய் இருந்தா கொடு

என்னிடம் சுத்தமா இல்ல

பரவாயில்லை கொடு. நான் சுத்தம் பண்ணிக்கிறேன்!

● இந்த ஊரில் தங்க வீடு கிடைக்குமா?

கிடைக்காது. கூரை வீடு. ஓட்டு வீடு, மாடி வீடுதான் கிடைக்கும்!

• சர்தார் : தம்பி நீ என்ன படிச்சிருக்க?

பையன் : பி.எ.

சர்தார்: அடப்பாவி, படிச்சதே ரெண்டு எழுத்து அதையும் தலை கீழா படிச்சிருக்கே!

• இன்டெர்வியு, சேல்ஸ் மேனேஜர்: உங்களுக்கு எதாவது விற்பனை அனுபவம் இருக்கிறதா?

ஓ! நிறைய, என் வீடு, கார் மற்றும் என்னுடைய மனைவியின் அனைத்து நகைகளுமே விற்றிருக்கிறேன்!

• மனைவி: ஏங்க நீங்களாவது உங்கள் நண்பரிடம் சொல்லக் கூடாதா அவருக்குப் பார்த்த பெண் நல்லாவே இல்ல!

கணவன் : நான் ஏன் சொல்ல வேண்டும்! பாவிப்பயல் எனக்கு அவன் சொன்னானா?

• கண்ணா நீ...

கல்யாணத்திற்கு முன்னாடி சூப்பர்மேன்

கல்யாணத்திற்கு பின்னாடி ஜென்டில்மேன்

பத்து வருஷத்திற்கு பிறகு வாட்ச்மேன், நாற்பது வருஷத்திற்கு பிறகு டாபர்மேன்..

• ஒரு பொண்ணு போட்டோவுல

தேவதை மாதிரி இருந்தாலும் நெகடிவ்ல பிசாசு மாதிரி தான் இருப்பா..

• உன்னை யாராவது லூசுன்னு சொன்னா கவலை படாதே!

வருத்த படாதே!

ஃபீல் பண்ணாதே!

உங்களுக்கு எப்படி தெரியும்ன்னு கேள்!

• காதல் ஒரு மழை மாதிரி

நனையும் போது சந்தோஷம்

நனைந்த பின்பு ஜலதோஷம்

• மகனே பரிட்சையில் எத்தனை கேள்வி வந்தது?

ஐந்து கேள்விப்பா.

நீ எத்தனை கேள்வி விட்டுட்டே?

முதல் மூணும் கடைசி இரண்டும்

வெரிகுட் கீப்பிடப்

• டேய் என் ஜாதகப்படி எனக்கு அறிவு ரொம்ப ஜாஸ்தியாம். இப்பவாவது தெரியுதா நான் ஏன் ஜாதகத்தை நம்புறதில்லைன்னு???

• என்னங்க ஏன் அடிக்கடி சமையல் ரூம் பக்கம் போகிறீங்க?

டாக்டர் தான் சுகர் இருக்கான்னு அடிக்கடி செக் பண்ணிக்கச் சொன்னார் அதான்...

• நீங்க உடனடியா மீன், ஆடு, கோழி சாப்பிடுவதை நிறுத்த வேண்டும்..

அதுக சாப்பிடுவதை நான் எப்படி நிறுத்த முடியும் டாக்டர்...

• டாக்டர் என் மனைவி ஓவரா டி வி பாக்குறா எந்த அளவுக்கு பாக்குறாங்க?

கரண்ட் கட்டானாலும், டார்ச் அடிச்சிப் பாக்குறா..

• நம்ம பையன் எங்க பணம் வைத்தாலும் எடுத்திட்டு போயிடறாங்க.

அவனுடைய காலேஜ் புத்தகத்தில் வை பத்திரமா இருக்கும்.

• ஒரு காப்பி எவ்வளவு சார்?

5 ரூபாய்

எதிர்த்த கடையில 50 காசுன்னு எழுதியிருக்கே?

டேய், சாவுக்கிராக்கி அது நீணிஸிளிஙீ காப்பிடா!!!

• உங்க கிட்னி பெயில் ஆகிடுச்சு...

நான் என் கிட்னிய படிக்க வைக்கவே இல்லயே டாக்டர் அது எப்படி பெயில் ஆகும்.

முகநூலில் இருந்து

**அ. அமல்ராஜ்**

# சீவகசிந்தாமணி - அறிமுகம்

(தொடர்)

# கோவிந்தையார் இலம்பகம்

## (கதைச் சுருக்கம்)

1





புலவர் கு. ஏழுமலை

சீவகன் காந்தருவதத்தையோடு கருத்தொரு மித்து ஆதரவு பட்டின்புற்றிருக்கும் நாளில், இனிய இளவேனிற் பருவம் வந்தெய்தியது. அப்பொழுது மாந்தர் எல்லாம் பொழில் விளையாட்டிற் புக்கனர். அவ்விராசமாபுரத்திலுள்ள சுரமஞ்சரி என்பாளும், குணமாலை என்பாளும் தந்தோழிமாரோடு விளையாட அப்பொழிலிற் புக்கனர். அப்பொழி லின் கண் அப்பெருமாட்டியார் இருவரும் நறுஞ்சுண்ணங் காரணமாகத் தம்முட்கலாய்த்துக் கொண்டனர்.

தஞ்சுண்ணங்களுள் வைத்துச் சிறந்தது யாதென அறிதற்குத் தந்தோழியரை அறிஞரிடத்தே சுண்ணத்தோடு போக்கினர். அதுகண்ட அறிஞர் பலரும், அவரைச் சீவகன்பாற் காட்டி வினவும்படி அறிவுறுத்தினர். அம்மகளிர் அவ்வாறே அவற்றைச் சீவகனுக்குக் காட்டி "இவற்றுள் சிறந்தது செப்புக!" என்று வேண்டினர். சீவகன் அவற்றை நுண்ணிதின் ஆராய்ந்து, "குணமாலை சுண்ணமே சிறப்புடையது" என்றான். அம்மகளிர் தந்தலைவியர்பாற் சென்று இதனை உணர்த்தினர்.

சீவகன் தன் சுண்ணத்தை மதியாமை அறிந்த சுரமஞ்சரி பெரிதும் வருந்தினள். "அச்சீவகன் என்பான் வலிந்துவந்து என்னருட்கு இரந்து நிற்கும் படி யான் நோன் பியற்றுவல்" என்று குறிப் பாலு ணர்த்தித் தன் கன்னிமாடம் புகுந்து, சீவகன் தன்பால் வலிந்து வந்து அருள்வேண்டற் பொருட்டு நோன்பாற்றியிருந் தனள்.

இனி, அப்பொழிலிலே பார்ப்பனர் சோற்றுத் திரளை ஒரு நாய் தீண்டிற்றாக? அப்பார்ப்பனர் அதனைத் தடியாற் புடைத்தனர். அந்நாயைக் கண்ட சீவகன் இரக்கமுற்று, அதன் செவியில் ஐந்தெழுத்து மறைமொழியை ஓதினன். அதனால் அந்நாய் அவ்வுடல் ஒழித்துத் தேவனாயிற்று. சுதஞ்சணன் என்னும் பெயருடைய அத்தேவன் மீண்டுவந்து சீவகனை வணங்கினான். நின்னருளால் யான் இப்பொழுது இயக்கர் தலைவனாகிச் சந்திரோதய மென்னும் நகரில் இனிதே வாழும் பேறுபெற்றேன். என் பெயர் சுதஞ்சணன் என்பதாம். நினக்குக் குற்றேவல் செய்யும் கருத்துடையேன்" என்றனன். அது கேட்ட சீவகன் வியந்து "நண்ப! நீ எனக்குப் பகைவரால் துன்பம் நேரும்போது துணைபுரிவா யாக! இப்பொழுது நின்னூர் சென்று இன்புற்று வதிக!" எனக் கூறி விடுவித்தனன்.

மாந்தரெல்லாம் பொழிலில் ஆடி மீண்டு வந்தனர். அப்பொழுது கட்டியங்காரன் பட்டத்து யானையாகிய அசனிவேகம் செருக்குற்றுப் பாகர்க் கடங்காமல் சிதைந்து ஓடிற்று. அதனெதிரே வந்த

குணமாலையைச் சீறி அவளைக் கொல்லத் தொடங்கியது. அவ்வழியே வந்த சீவகன் விரைந்தோடி அதனை அச்சுறுத்தி ஓட்டிக் குணமா லையை உய்யக்கொண்டனன். இருவருளங்களும் ஒன்றுறக் கலந்தன.

குணமாலை சீவகன்பாற் காதல் கொண்டுள்ள செய்தியை அவள் நற்றாயாகிய வினயமாலை குறிப்பானுணர்ந்து தந்தையாகிய குபேரமித்திரனுக் குணர்த்தினள். அவனும் பெரிதும் மகிழ்ந்து கந்துக்கடனிடத்தே தூதுவிட்டுத் தன் கருத்தை உணர்த்தினன். அவனும் மகிழ்ந்துடன் பட்டனன். அவ்வழி, சீவகனுக்குங் குணமாலைக்கும் திருமணஞ்சிறப்பாக நிகழ்ந்தது. இருவரும் ஈருடற்கு ஓருயிராய் இணைந்து இன்புற்றனர்.

இனிச் சீவகனுக்குத் தோற்றமையால் நாணிக்க வளமறுத்து நின்ற அசனிவேகத்தைக் கண்ட கட்டியங்காரன், நிகழ்ச்சியெல்லாம் வினவி அறிந்தனன். சீவகன்பாற் சீற்றங்கொண்டான். “அவனைக் கட்டி என் முன்னர்க் கொணர்க'' என மதனனை மறவருடன் ஏவினன். அவர்கள் சீவகன் இல்லத்தை வளைத்துக் கொண்டனர். சீவகன் சினந்து போராற்றப் புலிபோலப் புறப்பட்டனன். தான் தன் ஆசிரியனுக்கு அளித்த உறுதிமொழியை நினைந்து அடங்கினன் இருமுதுகுரவரும் அரசன் ஆணைக்கு அடங்கி அவன்பாற் செல்லுதலே அறிவுடைமை யாம் என்று செவியறிவுறுத்தினர். சீவகன் அக் கருத்திற் கிணங்கி அம்மறவர்க்கு அடங்கியவனாய் அவர் புடைசூழச் சென்றனன். நந்தட்டன் முதலி யோர் மாற்றாரை வெல்லுதற்குரிய சூழ்ச்சியை ஆராய்ந்தனர்.

இஃதறிந்த காந்தருவதத்தை தன் மந்திர வன்மையால் சீவகனைச் சிறைவீடு செய்ய முயன் றனள். அவள் கருத்தறிந்த சீவகன் நாணினன். சுதஞ்சணனை நினைத்தான். சீவகனுக்குற்ற துன்பத் தைச் சுதஞ்சணன் தனது தெய்வ ஞானத்தால் உணர்ந்து, ஞெரேலெனக் காற்றையும் மழையையும் தோற்றுவித்து மதனன் முதலியோரை நிலைகுலைத் துப் பிறர் உணராதபடி சீவகனைத் தன் மார்போடு அணைத்தெடுத்துக்கொண்டு தன் பதியை எய்தி னன். அவ்விடத்தே தமர்க்கெல்லாம் இவன் சிறப்பினை உணர்த்தினன். இவ்வாற்றால் சீவகன் சுதஞ்சணனோடு அவன் ஊரில் இனிதே உறை வானாயினன்.

இனி, மதனன் சீவகன் எவ்வழி மறைந்தான்? என்றுணராதவனாய்த் திகைத்தனன். கட்டியங் காரன் தன்னைக் கடிவான் என்றஞ்சி ஏதிலான் ஒருவனை வாளாற் கொன்று உருத்தெரியாமல் புரட்டி விட்டுக் கட்டியங்காரன் பாற் சென்று “அரசே! மழையும் காற்றும் மிக்கமையால் சீவகனை உயிருடன் கொணர்தல் அருமையாயிற்று. ஆதலால் அவனைக் கொன்று வீழ்த்திவிட்டேன், என்றனன். அதுகேட்ட கட்டியங்காரன் மதனனைப் பாராட் டிச் சிறப்புகள் பலவும் நல்கினான்.

(தொடரும்)

## அரிய தகவல்

புலியே தாக்க பயப்படும் விலங்கு – காட்டு எருமை
வாலில்லாத பூனைகளின் பெயர் மாங்க்ஸ் (Manx)
ராட்ஷச பாண்டாவின் முக்கிய உணவு மூங்கில் கிளைகள்
முள்ளம்பன்றி விரும்பி சாப்பிடும் உணவு உதிர்ந்த மான் கொம்புகள்
உலகின் மக பெரிய கங்காரு – சிவப்பு கங்காரு
எதிரிகள் பயமுறுத்தும் போது மயங்கிவிழும் விலங்கு – அப்போசம் (ஒருவகையான எலி)
ட்ரே என்னும் கூண்டுகளில் வாழ்பவை அணீல்கள்
மிக குறைவான ஆயுட்காலத்தை உடையது – ஈ
மிக மெதுவாக இயங்கும் பாலூட்டி – தேவாங்கு
எலும்பு கூடு இல்லாத விலங்கு – ஜெல்லி மீன்
எறும்புகள் தூங்குவதே இல்லை
மரங்கொத்தி பறவையால் மரத்தை ஒரு நொடியில் 20 முறை தொடர்ந்து கொத்த முடியும்.
கரப்பான்பூச்சியால் ஒன்பது நாட்கள் வரை தலை துண்டிக்கப்பட்ட நிலையில் வாழ இயலும்
பச்சோந்தியின் நாக்கு அதன் உடலைவிட இருமடங்கு நீளமாக இருக்கும்
ஒரு நத்தையால் மூன்று ஆண்டுகள் வரை தூங்க முடியும்
பட்டாம்பூச்சிகள் அதன் கால்களை கொண்டுதான் உணவை ருசிக்கின்றது



# கைது செய்வது குறித்த சட்டம் என்னவென்று தெரிந்து கொள்வோம்!!

கைது செய்வது என்ற நடவடிக்கை மனித உரிமைகளின் அடிப்படையான சுதந்திரத்தில் அரசு தலையிடுகிறது என்பதாகும். இந்திய அரசியல் சட்டம் மட்டுமல்ல, சர்வதேச மனித உரிமைகள் சட்டமும் கூட, மாநில அரசு, சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டும் தன்னுடைய அடிப்படைப் பணியில் எந்த ஒருவரையும் கைது செய்யும் அதிகாரத்தை அங்கீகரிக்கிறது. நியாயமான, நேர்மையான, உண்மையான சட்ட முறைகளின்படி மட்டுமே இச்சுதந்திரப் பறிப்பை அரசியலமைப்புச் சட்டம் அனுமதிக்கிறது.

அரசியலமைப்புச் சட்டம் 22(1)ன் படி கைது செய்யப்படும் எல்லா நபருக்கும், எந்த அடிப்படையில் கைது செய்யப்படுகிறார் என்பதை கைது செய்யப்பட்டவுடன் தெரிவிக்க வேண்டும். கைதானவர்களின் விருப்பத்திற்கு இணங்க வழக்குரைஞரை கலந்து ஆலோசிக்கும் உரிமையையோ, அவர் மூலம் பாதுகாத்துக் கொள்ளும் உரிமையையோ, மறுக்கக் கூடாது. 1973 குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 50ன் படி, ஒருவரைக் கைது செய்யும் போலீஸ் அலுவலர், உடனடியாக, அவர் கைது செய்யப்படுவதற்கான குற்றத்தின் முழு விபரங்களையும் அல்லது கைதுக்கான அடிப்படைக் காரணங்களையும் தெரிவிக்க வேண்டும். இத்தேவைகள் மீறப்படும்போதே கடைப்பிடிக்கப்படுவதாக உள்ளது.

அரசியல் சட்டம் பிரிவு 22(2) மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 57 இவற்றின்படி கைது செய்யப்பட்டவரை நீதிமன்றத்தின் சட்ட முறைப்படி கட்டாயம் ஆஜர்படுத்த வேண்டும் என்பது சரியாகக் கடைபிடிக்கப்படுவதில்லை.

மனித உரிமை மீறல்களில் கைது செய்தல் மற்றும் போலீஸ் நிலைய காவலில் வைக்கும்போது போலீசின் அதிகாரங்கள் தவறாகப் பயன்படுத்துவது தொடர்பாக நிறையப் புகார்கள் உள்ளன. குறிப்பாக, சட்டத்திற்கும் நடைமுறைக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்கின்ற வகையிலே, சட்ட ஒழுங்கை சிறப்பாகப் பராமரிப்பதற்காக சரியாக புலன் விசாரணை செய்யும் போலீசாரின் அதிகாரங்களைக் குறைக்காமலேயே கைது செய்வதில்

வழிகாட்டும் நெறிகளை வரையறுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

கைது செய்வதற்கு முன்னர்

புகாரின் நம்பகத்தன்மை, யார் மீது புகார் செய்யப்பட்டுள்ளதோ அவருக்கு குற்றத்தில் பங்கு மற்றும் கைது செய்ய வேண்டியதன் அவசியம். இவற்றினை விசாரணைக்குப் பின்னர், முழு திருப்தியுடன் அறிந்ததும், பிடியாணை இல்லாமல் கைது செய்யும் அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் (ஜோகிந்தர் குமார் வழக்கு உச்சநீதிமன்ற வழக்கு 260)

நீதிமன்றங்களில் தொடரக்கூடிய வழக்குகளில் சட்டப்படி பிடியாணை இல்லாமல் கைது செய்ய அதிகாரம் உள்ளது என்பதால் மட்டுமே கைது செய்வதை நியாயப்படுத்த முடியாது.

ஜோகீந்தர் குமார் வழக்கில் உச்சநீதிமன்ற தீர்ப்புக்குப் பின்னர், கைது செய்யும் அதிகாரம் சரியான முறையில் கையாளப்பட்டுள்ளதா இல்லையா என்பதை நியாயப்படுத்த வேண்டும்.

நீதிமன்றங்கள் தொடரக்கூடிய வழக்குகளில் கீழ்க்குறிப்பிடும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சூழல்களில் கைதை நியாயப்படுத்தலாம்.

கொலை, கலகம் விளைவித்தல். திருட்டு, பாலியல் பலாத்காரம் போன்ற மிகக் கடுமையான குற்றங்களில் குற்றவாளியென சந்தேகிக்கப்படுபவர் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்து அல்லது மறைந்து விடுவார் என்றால் அவரைக் கைது செய்வது அவசியம்.

சந்தேகத்துக்கு உள்ளானவர் கொடூரமான நடத்தையாளர், அவர் மீண்டும் குற்றங்கள் செய்வார் என்றாலும் கைது செய்யலாம்.

சந்தேகத்துக்கு உள்ளானவர். சாட்சியங்களை அழித்து விடுவார் அல்லது சாட்சிகளை கலைத்து விடுவார் அல்லது சந்தேகத்துக்குள்ளான கைதாகாத மற்றவர்களை எச்சரித்து விடுவார் என்றாலும் கைது செய்யலாம்.

சந்தேகத்துக்கு உள்ளானவர் வழக்கமான குற்றவாளி, கைது செய்யப்படாவிட்டால் இதே போன்று அல்லது வேறு குற்றங்களை அவர் செய்வார் என்றாலும் கைது செய்யலாம். (தேசிய போலீஸ் ஆணையத்தின் மூன்றாவது அறிக்கை)

மேலே குறிப்பிட்ட மிகக் கொடிய வழக்கு களைத் தவிர, போலீஸ் அதிகாரி சம்பந்தப்பட்ட நபருக்கு போலீஸ் நிலையத்துக்கு வந்து அங்கிருந்து அனுமதி இல்லாமல் வெளியே போகக் கூடாது என நோட்டீஸ் அனுப்பி, கைதினைத் தவிர்க்கலாம்.

சந்தேகப்படுபவர்கள் தலைமறவாகி விடுவார்கள் என்ற அச்சம் இல்லாவிட்டால் ஜாமீனில் விடக்கூடிய குற்றங்களுக்கு கைது செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

கைது அல்லது விசாரணைக்குச் செல்லும் போலீஸ் அலுவலர்கள் தங்களின் பெயர் மற்றும் பதவி அட்டையுடன். சரியான அடையாளத்துடன் சென்று செயல்பட வேண்டும். காவல் நிலையத்தில் உள்ள பதிவேடுகளில் கைது மற்றும் விசாரணையில் ஈடுபட்ட காவல் அதிகாரிகளின் பெயர்கள் உடனடியாக பதிவு செய்யப்பட வேண்டும்.

பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் இந்திய தண்டனைப் பிரிவுகள் எத்தனை உள்ளன. மேலும், அந்தப் பிரிவு சட்டமானது என்ன தண்டனையை கொடுக்கிறது என்பதைப் பற்றி பார்க்கலாம்.

இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 509: சொற்கள் மூலமோ, அல்லது செயல்கள் மூலமோ பெண்களை மானபங்கப்படுத்தினால், ஓராண்டு காலம் சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது அபராதத்துடன் கூடிய சிறைத்தண்டனையோ விதிக்கலாம்.

இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 507:

மொட்டைக் கடிதம் எழுதி அச்சுறுத்தும் ஆணுக்கு, 2 ஆண்டு காலம் வரை சிறைந்ததண்டனையோ அல்லது அபாரதமோ அல்லது அபராதத்துடன் கூடிய சிறைத்தண்ட னையோ விதிக்கலாம்.

இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 354:

பெண்களை மானபங்கம் செய்யும் நோக்கத் துடன் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினாலோ

அல்லது பலவந்துப்படுத்தினாலோ அதற்கு 2 ஆண்டு காலம் வரை சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது அபராதத்துடன் கூடிய சிறைத்தண்ட னையோ விதிக்கலாம்.

இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 294:

மற்றவர்க்குத் தொல்லை ஏற்படும் வகையில் பொது இடங்களில் யாரேனும் ஒருவர் ஆபாசமான செய்கையைச் செய்தாலோ அல்லது ஆபாசமான பாடல்கள், சொற்கள் ஆகியவற்றைப் பொது இடங்களில் அல்லது பொது இடங்களுக்கு அருகிலோ பாடினாலும் அல்லது பேசினாலும் அவருக்கு 3 மாதங்கள் வரை சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமே விதிக்கலாம்.

பணிபுரியும் பெண்களுக்கான பாலியல் சமத்துவத்தைப் பாதுகாத்து செயல்படுத்தும் வகையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ள வழிகாட்டுதல்களும், வழி முறைகளும் அனைத்துப் பணியிடங்களிலும் கடுமையாகப் பின்பற்ற வேண்டும். இவ்வழிதகாட்டும் நெறிமுறைகள் எல்லாம் இதற்கெனத் தனிச் சட்டம் இயற்றப்படும் வரை எவரையும் கட்டுப்படுத்தக் கூடியதாகவும், செயல்படுத்தக் கூடியதுமாகும்.

## நிகழ்வு




15-08-2015 அன்று சென்னை நெற்குன்றம் லிட்டில் ஸ்டார் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் அனைத்து இந்திய பத்திரிகை ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்கள் சங்கத் தலைவர். டாக்டர். எஸ். இராஜேந்திரன் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைத்து அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்.

ஓவியப்போட்டியில் பங்குபெற்றவர் களுக்கு பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார். விழாவில் பத்திரிகையாளர்கள் பன்னீர் செல்வம், ரஞ்சித்குமார், மௌரியன், அண்ணாசாமி, சாந்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை, பள்ளி யின் தாளாளர் திரு. முத்துக்குமார் அவர்களும் விருகை நியூஸ் திரு. வேலு அவர்களும் சிறப்பாகச் செய்திருந் தனர்.



# வல்லூறுகளுக்கு அழைப்பு!

யார் இந்த வெள்ளையர்? தொலை தூரத்திலிருந்து இங்கு வரக்காரணம் என்ன?

இவர்களா! பாபம். பிழைப்புக்காக இங்கு வந்திருக்கிறார்கள். வியாபாரிகள்.

நம் நாட்டிலே இவர்கள் தங்கி இருந்து வியாபாரம் செய்ய, தொழில் நடத்த, அனுமதி கிடைக்குமா?

அனுமதி தரவேண்டும் என்று, கெஞ்சிக் கேட்டுக்கொள்வதற்காகத் தான், ராஜசபைக்குச் செல்கிறார்கள். மண்டியிட்டு வணங்கி, மன்னனிடம் முறையிட்டு, அனுமதி பெற்றானபிறகு, வியாபாரம் செய்து, பிழைத்துக் கொள்வார்கள்.

1601ஆம் ஆண்டுக்குப் பிறகு பரங்கியர், இங்கு புகுந்து வியாபாரம் செய்யும் அனுமதியைப் பெறக் கெஞ்சிக் கிடந்தநிலை, மேலே தீட்டப்பட்டிருப்பது.

யார் இந்தக் கருநிறத்தார் அதிகக் கருப்பாகவும் காணோம்! பழுப்பு நிறத்தவர்களாக உள்ளனர்! எதற்காக இங்கு வந்துள்ளனர்?

இவர்கள் இந்திய நாட்டுத் தலைவர்கள்! தங்கள் நாட்டிலே, வந்திருந்து தொழில் நடத்தும்படி, நம்மைக் கேட்டுக் கொள்ள வந்திருக்கிறார்கள்.

அவர்கள் நாட்டிலே, நாம் சென்று, தொழில் நடத்துவதா? ஏன்? அவர்களால் முடியவில்லையா? தொழில் நடத்த?

போதுமான பணமும், தேவையான திறமையும் இல்லை.

ஓஹோ! அதனால் தான் நம்மை நாடி வந்துள்ளனரோ?

ஆமாம், பாபம்! ரொம்பவும் வேண்டிக் கொள்கிறார்கள். நமக்கு அங்கு சகல வசதியும் உரிமையும் தருவதாகக் கூறுகிறார்கள்.

1949ஆம் ஆண்டிலே, அமெரிக்கா போன்ற நாடுகளிலே உள்ளவர்கள் பேசிக்கொள்வது தீட்டப்பட்டிருக்கிறது.

மண்டியிட்டு அனுமதி கேட்டகாலம். பதினேழாம் நூற்றாண்டு!

மனுச்செய்து கொண்டு, மனமகிழ்ச்சியூட்டி, அவர்களை அழைத்து வருவது, இருபதாம் நூற்றாண்டில்!

உள்ளே புக முடியுமோ என்று அஞ்சிக்கிடந்த அன்னியருக்கு இப்போது உபசாரம் பலமாக நடக்கிறது உள்ளே வரச்சொல்லி!

அன்னியரின் நுழைவு, அக்கிரமமானது, ஆதிக்கத்துக்கு வழிகோலுவதும், அதிலேயும், வியாபார, தொழில், சம்பந்தமாக அன்னியர் நுழைவது, மக்களின் வாழ்வைக் கெடுக்கக் கூடியது. வியாபாரியாக உள்ளே நுழைய முதலில் இடம் கிடைத்து விட்டால், பிறகு அவர்கள். ஆதிக்கக் காரராகி, நமது அரசுகூடக் கெடும்படி செய்து விடுவார் என்று அஞ்சிய, அந்நாள் மன்னர்கள், உள்ளே நுழைய விரும்பிய ஆங்கிலருக்குப் பல நிபந்தனைகளை விதித்தனர். இன்னின்ன கட்டுத்திட்டங்களுக்கு அடங்கி நடக்கவேண்டும் என்று முறைவகுத்தனர்.

எல்லா நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு, அடக்கமாகவே, வியாபாரத்தைத் துவக்கினர், வெள்ளையர்.

இரண்டோர் நூற்றாண்டுகளுக்குள், பண்ட சாலைக்குப் பக்கத்திலே பாசறைகள், கணக்கெழுது வோருக்குத் துணையாகக் குண்டுவீசிகள், என்ற நிலை பிறந்தவிட்டது.

கோட்டைகள் கட்டிக்கொண்டனர், செயின்ட் ஜார்ஜ் கோட்டைபோல!

எந்த ராஜசபையில் மண்டியிட்டு நின்று, அனுமதி கோரினரோ, அதே ராஜசபைகளிலே, பேரம் பேசவும், பிறகு, படைஎடுக்கவும் துணிந்தனர்.

வியாபாரியாக வந்தனர் உள்ளே பணிவுடன் அனுமதியின் பேரில். பிறகோ, வேந்தராயினர் அடக்கலாயினர் இந்நாட்டை.

இந்தக் கேட்டினைக் களைந்து நாட்டை மீட்டிட, எண்ணற்ற இளைஞர்கள், தியாகத் தீயிலே குதித்தனர் நாடு, சுயாட்சி பெற்றது! ஆனால்....!

தனிப்பட்ட முதலாளிகள் பெருந்தொழிற்சாலைகளை வைத்து நடத்தி இலாபவேட்டையில் ஈடுபடும், போக்கே, பொருளாதாரச் சுரண்டல் முறை என்று, இந்தக்கேடு நீக்கப்பட்டாலொழிய, ஏழைக்கு வாழ்வும் நாட்டுக்கு வளமும் கிடைக்காது என்றும், மேடை அதிரத்தலைவர்கள் முழக்கமிட்டனர்.

இலாப உணர்ச்சியை ஒழித்துச் சேவா உணர்ச்சியைப் புகுத்தி முதலாளித்துவமுறையின், நச்சுக் கொள்கையைத், தூய்மைப்படுத்த வேண்டும். அப்போதுதான் சமூகம் சுகப்படும், நாடு புதுவாழ்வு பெறும், என்று உத்தமர் காந்தியார் உரைத்தார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பெருங்கொள்ளைக் கூட்டத்தின்தலைவன்! அவன், உள்நாட்டு உழைப்புறிஞ்சிகளைத் தன்னுடன், கூட்டாளியாக பங்காளியாக ஆக்கிக் கொண்டான். ஏழை, இந்தக் கூட்டுக் கம்பெனியால் கொள்ளையடிக்கப்பட்டுத் தேய்கிறான் என்று கர்ஜனை செய்தனர், தலைவர்கள். உள்நாட்டு முதலாளிகளின் இலாபவேட்டையும், ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் திட்டமும், இரண்டும் ஒழிக்கப்படுவதுடன், வெளி நாட்டார் இங்குப், பணம் போட்டுத் தொழில் நடத்தி, அதன்மூலம் இலாபம் அடைவதுடன் நாட்டின் ஜீவநாடிகளைக் கைப்பற்றி, ஆதிக்கம் செலுத்தி, நம்நாட்டை ஆட்டிப்படைக்கும் கொடுமை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். அன்னிய நாட்டு மூலதனம் இங்கே புகுந்து, ஆதிக்கம் பெறுவதற்கு நாம் இடமளிக்கக்கூடாது என்று வீராவேசமாகத் தலைவர்கள் பேசிவந்தனர். ஆனால், இப்போது, என்ன நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

தொழில்களைச் சர்க்கார் உடைமையாக்குவது என்ற திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

இந்தத் திட்டத்தை முதலாளிமார்கள் பலமாகக் கண்டித்துள்ளனர்.

அவர்கள் கண்டித்தது ஆச்சரியமூட்டக் கூடியதல்ல. நேரு, பட்டேல் போன்ற தலைவர்களே, இப்போது அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்ட னர்.

பெருந்தொழிற்சாலைகள், எப்போதும் போலவே, முதலாளிகளிடமே உள்ளன.

புதிய தொழிற்சாலைகளையும் அமைக்கும்படி, அந்த முதலாளிகளை முதலாளித்துவ முறையை ஒழித்தே தீருவோம் என்று முழக்கமிட்ட, தலைவர்களே வேண்டிக் கேட்டுக் கொள்கிறார்கள்.

இலாபவேட்டையைக் கண்டித்த அதே தலைவர்கள், முதலாளிகள், இலாபநோக்கம் இல்லையேல், தொழில் ஆர்வம் பிறக்காது என்று பச்சையாகக் கூறிவிட்டது கேட்டு, கோபமோ, பயமோ கொள்ளாமல், உபதேசம் கேட்டு, உண்மையை அறிந்து கொண்ட உத்தமசீடன் குருவின் முன் கைகட்டி நிற்பதுபோல, முதலாளிகள் முன்பு இலாப நோக்கத்தை விட்டுவிடும்படி

கூறவில்லை அந்த நோக்கத்தைக் கண்டிப்பதை விட்டுவிட்டோம்: தொழில்களை நடத்துங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறார்கள்.

சர்க்காரின் தலையீடும் இல்லை, இலாப வேட்டைக்குத் தடையும் கிடையாது என்ற இரண்டு வரம் கிடைத்திருக்கிறது. சபிக்கப்பட்டு வந்த முதலாளிகளுக்கு!

இதுமட்டுமா? வெளிநாட்டாரின் முதல், இங்கு முகாம் அமைத்துக் கொண்டு ஆதிக்கம் செலுத்துவது கூடாது என்று முழக்கமிட்ட அதே தலைவர்கள், வெளிநாட்டு முதல் வேண்டும், ஏராளமாக வேண்டும். தங்கு தடையின்றி, உள்ளே வரலாம். என்று உபசாரமொழி பேசுகின்றனர்.

புதிய புதிய தொழில்களைத் துவக்க, ஏராளமான பணம் முதலாகப் போட முன்வரும்படி, வெளிநாட்டாரைக் குறிப்பாக, அமெரிக்காவை நேருவே கேட்டுக் கொள்கிறார்.

போட்ட முதல் கெட்டுவிடாது! துவக்கப்படும் தொழிலை, துரைத்தனம், கைப்பற்றிக் கொண்டு விடாது. கிடைக்கும் இலாபத்துக்குக் குந்தகம் ஏற்படாது. இலாபத்தை உங்கள் நாட்டுக்குக் கொண்டு போவதற்கு ஒரு தடையும் ஏற்படாது. வருக! வருக! என்று நேருவே வருந்தி வருந்தி அழைக்கிறார்.

வல்லூறுகளை அழைக்கிறார், கிளி கொஞ்சும் சோலைக்கு விருந்துக்கு!

கையிலே கவண் இல்லை! வலை ஏதும் இல்லை! தினை உண்டு! தீங்கனிகள் பல உண்டு, தத்தைக் உண்டு! என்று விவரிக்கிறார்.

புதிய ஆட்சியின்போக்கு எங்ஙனமிருக்குமோ, சமதர்மத்திட்டத்தைச் சதா பேசிக் கொண்டிருந் தவர் களல்லவா இப்போது சர்க்காரை நடத்து கிறார்கள் ஏழைப் பங்காளர்களல்லவா இப்போது ஆளவந்தார்களாகியுள்ளனர். இவர்கள் முதலாளித்துவ முறையைக் கருவறுத்து விடுவதாகச் சபதம் செய்தவர்களாயிற்றே. அன்னிய நாட்டுப் பொருளாதாரப் பிடியிலிருந்து நாட்டை விடுவித்து, நல்வாழ்வு தரப்போகிறோம் என்று மக்களிடம் வாக்குக்கொடுத்தவர்களாயிற்றே. இவர்களை நம்பி, நாம் எப்படி இந்தியாவில் பணம் போட்டுத் தொழில் நடத்துவது? இலாபமோ, நிரந்தர நிலையோ, ஏது, என்று பயந்தனர் ஆங்கிலோ அமெரிக்க முதலாளிகள். இன்றோ. அவர்களை அழைக்கின்றனர், தலைவர்கள்! இலாபம் உண்டு வாரீர்! தயங்காமல் வாரீர்! தடை எதும் இராது வாரீர்! என்று.

கண்ணே வருக! கனிரசமே வருக! என்று பிள்ளைத் தமிழ் பாடும் தலைவர்களாகிவிட்டனர். ஒழித்தே தீருவோம் என்று முழக்கமிட்டு வந்த அதே தலைவர்கள்.

வல்லூறுகள் வரப்போகின்றன. விருந்துண்ண! விசேஷ அழைப்பின் பேரில்!!

சர்க்காரின் திட்டம் தெளிவாக்கப்பட்டு விட்டது, எனவே இனிச் சந்தேகமோ அச்சமோ கொள்ளாமல், தாராளமாக வந்து தர்பார் செய்யலாம் என்று தைரியம் கூறுகிறார், சர். விஸ்வேஸ்வரர், டாலர் சீமான்களுக்கு!

பதினேழாம் நூற்றாண்டு அன்னிய ஆதிக் கத்தைப் புகுத்த வேண்டுமானால் படுகொலைகளும் பயங்கரச் சண்டைகளும் நடத்தியாக வேண்டிய நிலை இருந்த காலம்.

இருபதாம் நூற்றாண்டு: அன்னிய ஆதிக்கம், மிக மிக நாசுக்கான முறையிலே, தந்திரமாக, பிறர் அறியாவண்ணம், புகுத்தி விடுவதற்கான, வழிமுறை வளர்ந்துவிட்ட காலம்.

ஆளைப் பிடித்து மிருகத்தமான முறையிலே அடித்துக் கொன்றுபோடும் காட்டு மிராண்டி முறைமாறி, ஒரு சிறு ஊசியில் விஷத்தைத் தோய்த்து வைத்து அதனால் அவனும் அறியாவண்ணம் குத்தி ஆளைச் சாகடிக்கும், சாகசக் கொடுமை வளர்ந்திருப்பது போலவே, இன்று ஒருநாடு மற்றொர் நாட்டின் மீது ஆதிக்கத்தைப் புகுத்துவதற்கு, மிக மிக இலகுவான முறைகளைக் கற்றுக் கொண்டுள்ளன, வல்லரசுகள்.

உருட்டும் கண்! மிரட்டும் சொல்! ஒரு காலத்திலே, ஆதிக்கக் கருவிகள்.

இன்று, அன்புப் பார்வை, உபசார மொழி, ஆதிக்கக் கருவிகளாகிவிட்டன.

இத்தகைய சூழ்நிலையின் போது, அன்னிய மூலதனத்தை, இங்கு வரவழைப்பது, ஆதிக்கக் காரரை, நாமாக வலிய வலிய வரவழைக்கும், விபரீதமான காரியமாகும்.

அன்னியர்கள், இங்கு பல ஆயிரம் கோடி பவுன் களையோ, டாலர்களையோ, கொண்டுவந்து, புதிய தொழிற்சாலைகளை அமைத்துக்கொண்டு, இலாபவேட்டை ஆடத் தொடங்கினால், அந்த ருசி அவர்களை, மீண்டும் புதிய ஏகாததிபத்தியத்தை தந்திரமான ஏகாதிபத்தியத்தை அமைக்கும் படியே தூண்டும். அந்தச் சமயத்திலே, நம் நாடு, அவர்களின் பிடியிலிருந்து, விடுபடுவதும், கஷ்டமாகிவிடும்.

அமெரிக்கா, ஒரு கரத்தில் பணக்குண்டும். மற்றோர் கரத்தில் அணுகுண்டும் வைத்துக்கொண்டு, அகில உலகிலும் தன் ஆதிக்கத்தைப் பரப்பும் திட்டத்துடன் வேலை செய்து வருகிறது.

இதனைத் தகர்க்கச் சம்மட்டி ஏந்தி நிற்கிறது சோவியத் நாடு.

உலகு, இரு முகாம்களாகிவிடுமோ, என்ற எண்ணம், பலருடைய மனதைக் குடையும் காலம் இது.

இந்தச் சமயத்திலே, வெளிநாட்டு மூலதனத்தை, வேண்டி, வேண்டி அழைப்பதும், பழைய கொள்கைகளை, முன்னாள் முழக்கங்களை மறந்துவிட்டு, வெளிநாட்டாருக்குத் திருப்தியும் தைரியமும் ஏற்படும் அளவிலும் முறையிலும் உபசாரம் பேசுவது, சலுகைகள் காட்டுவதும், வசதிகள் செய்து தருவதும் நாட்டை அன்னியருக்குக் காட்டிக் கொடுக்கும் துரோகக் காரியமாகும்.

இலாப மோப்பம் பிடித்துக்கொண்டு, பணம் படைத்தவர்கள், தாமாக வருவதும், வருகிறவர்களின் கொடிவழிப் பட்டியைக் கண்டறிந்து அவர்களுக்கு நாம் நிபந்தனைகள் விதிப்பதும், முறையாயிருக்க, இங்கு தலைவர்கள், முதலாளிகளைத் தேடித் தேடிக் கண்டுபிடித்து, கெஞ்சிக் கூத்தாடி நின்று அவர் களுக்கு என்ன வசதி தேவை, என்ன உரிமை தேவை என்று வினயமாக விசாரித்து, அவர்கள் கேட்பதற்கெல்லாம் இணங்கும் போக்குக் கொண்டுள்ளனர் தலைவர்கள். இது கேவலமானது மட்டுமல்ல, கேடு தருவது. பாமரன் மொழியிலே கூறுவதானால், நாட்டை அமெரிக்கக்காரனிடம் அடகுவைத்துக் கடன் வாங்கிறார்கள் என்று கூற வேண்டும். ஏன், தலைவர்கள், இந்தத் தீய பாதையில் செல்கிறார்கள்? நாட்டை மீட்க நற்பணி புரிந்து வீர இளைஞர்கள், ஏன். இதனை அனுமதிக்கிறார்கள்?

வல்லூறுகளுக்கு விருந்து! விருந்துக்கு அழைப்பு! வாய் திறவாமல் இருக்கின்றனர் மக்கள் வர இருக்கும் விபத்தை அறியாமல்!

(அன்று எழுதப்பட்ட கட்டுரை இக்காலத்திற்கும் ஏற்புடையதாக இருப்பதால் எடுத்தாளப்படுகிறது.)

நன்றி: **பாசறை முரசு**

●



மானம் பாத்த பூமிமேலே
அத்தனையும் போட்டுவிட்டோம் சாமி
எங்களுக்கு அந்தி மழைகூட இல்ல சாமி
எங்க மானம் காத்திடுமா பூமி

வட்டி மேல வட்டி வாங்கி
குட்டிமேல குட்டி போட்டு
மலையா ஏறுது சாமி
நல்ல வழி சீக்கிரமா காமி

பூமியிலே பசுமை இல்லை சாமி
பசுவும் காளையும் அடிமாடா போகுதய்யா சாமி
ஆறு குளம் வத்திப்போச்சி சாமி
குடிக்க சொட்டுத் தண்ணி இல்ல சாமி சாமி.

**இறையன்பு நோவா**
பூ. மணவெளி.



முருகன் பேரறிவாளன் சாந்தன்




# உண்மையைத் தேடி

ராசீவ்காந்தி கொலையில் முக்கியப் பங்காற்றிய வர் சுப்ரமணியசாமி என்று திருச்சி வேலுச்சாமி அவர்கள் பல ஆதாரங்களை வெளியிட்டு குற்றம் சாட்டுகின்றார். சுப்ரமணியசாமி சி ஐ ஏ வின் ஏஜெண்டு என்று வர்ணிக்கப்பட்ட வர். இவர் திட்டம் தீட்டி சதி செய்யும் சதிகாரர் என்றும் பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். கைபர் போலன் கணவாய் வழியாக இந்தியாவில் குடியேறிய வர்களின் வழித்தோன்றல். இவர் இருக்கும் இடத்தில் நீதி நேர்மை இருக்காது என்றும் எந்த ஒரு குற்றத்தையும் செய்துவிட்டு அதில் பிறரைச் சிக்க வைத்துவிட்டு தப்பிப்பதில் திறமையானவர் என்றும் சொல்கிறார்கள். பலகோடி ரூபாயைப் பெற்றுக் கொண்டு விடுதலைப்புலிகள் தான் கொன்றார்கள் என்று அப்பாவி தமிழ் மக்களை ராசீவ் கொலையில் சிக்க வைத்து தப்பித்துக் கொண்டவர் இவர் என்றும் கூறுகிறாாகள்.

குமரிக்கண்டம் என்ற நிலப்பரப்பு 3000 ஆண்டுகளுக்கு முன் இருந்தது என்பது ஆய்வு தரும் உண்மை. தமிழ்நாடு இலங்கை இணைந்த ஒரு நிலப்பரப்பாக இருந்திருக்கிறது. இலங்கையை தமிழ் மன்னர்கள் சிறப்பாக ஆட்சி செய்து வந்திருக் கிறார்கள். தென் மதுரையில் தமிழ்ச் சங்கங்கள் வளர்த்த மன்னர்கள் தமிழை வளர்த்த முறை பற்றி பல நூல்கள் எடுத்துரைக்கின்றன. இப்பகுதி பிற்காலத்தில் நீரில் மூழ்கிவிட்டது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். தமிழ்நாட்டின் ஒரு பகுதியான இலங்கை ஆங்கிலேயர்களின் வருகைக்கு முன்புவரை தமிழர்களால் ஆளப்பட்டு வந்தது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் இன்று தமிழர்கள் இன அழிப்புக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றனர். இலங்கை தமிழ்நாட்டுடன் இணைந்த பகுதி என்பதை உலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருந்த ஆசியாவின் புகழ்மிக்க யாழ்ப்பாண நூலகம் 1981 ஆம் ஆண்டு சிங்களக் காடையர் களால் அழிக்கப்பட்டது.

11 • இராஜாசிங்

தமிழ் மன்னர்கள் இலங்கையை ஆண்டனர் என்ற தெளிவான வரலாறு இருக்கின்றது. சான்றுகள் பல நிறைந்த யாழ்ப்பாண நூலகத்தை அழித்தபின்பும் மற்ற தரவுகளின் மூலம் இன்றும் அது உண்மை என்று தெளிவாகிறது. இப்படி இருக்க, இலங்கையை இராமர் அழித்தார் என்று கூறுவதும் நடக்கிறது. அப்படி என்றால் தமிழர்களை இராமர் அழித்தாரா? இவைகளை எல்லாம் தேர்தல் நேரத்தில் பெரியார் வழி நிற்பவர்களும் அம்பேத்கர் வழி நிற்பவர்களும் கேள்வி கேட்பார்கள். அதைத் தடுக்க வேண்டும் என்பதனால், இந்து மதம் என்று சொல்லி தங்களை காப்பாற்றிக் கொள்ள மற்ற மக்களை குறிப்பாக தமிழர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் பார்ப்பனர்கள் ஐ ஐ டி யில் பெரியார், அம்பேத்கர் வாசகர் வட்டம் என்ற மாணவர் அமைப்பை தடை செய்தார்கள்.

இராசீவ்காந்தி அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான கருத்தும் சிந்தனையும் கொண்டவர். அவர் இந்தியத் திருநாட்டின் பாரதப் பிரதமர். அவரை எதிர்த்து அமெரிக்கா தன் செல்வாக்கினை ஆசியப்பிரதேசத்தில் செலுத்து முடியாது என்று எண்ணி, அமெரிக்காவின் கைக்கூலியாக இருந்தவர்கள் இலங்கையின் ஆதரவுடன் இராசீவ்காந்தியை கொன்றார்கள் என்பதுதான் உண்மை. இக்கொலையை விசாரித்த விசாரணை அதிகாரிகள் சிவராசன், குமாரன் பத்மநாபன் போன்றோர்தான் முக்கியக் குற்றவாளிகள் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் இந்த விசாரணைக்கு தலைமையேற்ற சிறப்பு விசாரணை அதிகாரி கார்த்திகேயனோ, மேற்கண்டவர்கள் விடுதலைப்புலி இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறி இப்பழியை விடுதலைப்புலிகள் மீது போட்டு இராசீவ் காந்தி கொலையைத் தமிழர்கள் தான் செய்தார்கள் என்று கூறிவிட்டார்.

விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு மனிதநெறியும் ஒழுக்கமும் கொண்ட இயக்கம். அதில் தவறு செய்பவர் யாராக இருந்தாலும் அவர்கள் உடனடியாக அந்த இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டு தண்டனையும் கொடுக்கப்பட்டிருக்கிறன்றனர். பல உதாரணங்களைச் சொல்லாம். விடுதலைப்புலிகளின் முக்கியத் தலைவராக இருந்த கருணா நீக்கப்பட்டார் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் யாழ்ப்பாணத்திலிருந்தும் நீக்கப்பட்டார். இவர் 2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் போது இலங்கை அரசுடன் கைகோர்த்துக் கொண்டு காட்டிக்கொடுத்து பல்லாயிரம் தமிழர்கள் அழிவுக்கு காரணமாகிப்போனார் என்பது தமிழ் வரலாற்றில் மிகப்பெரிய வடுவாகும். விடுதலைப் புலிகள் முன்பு எந்த உத்தியைப் பயன்படுத்தி தங்கள் இயக்கத்தை வளர்த்தார்களோ அதே உத்தியைப் பயன்படுத்தி கருணா அந்த இயக்கத்தை அழித்தான். அதற்கு இலங்கை அரசும் இந்திய அரசும் துணை நின்றன. விடுதலைப்புலிகளாக இருந்தவர்கள் தங்களது நண்பர்களால் ( கருணாவின் ஆதரவாளர்கள் ) கடத்தப்பட்டு இலங்கை இராணுவத்தில் அதிகாரப்பூர்வமாய் அறிவிக்கப் படாத இராணுவ வீரர்களாய்ச் சேர்க்கப்பட்டு விடுதலைப்புலிகளுக்கு எதிராக களம் இறக்கப்பட்டனர். இந்த நயவஞ்சகச் செயலில் ஈடுபட்ட பல இளைஞர்கள் தங்களது நண்பர்களால் (விடுதலைப்புலிகளால்) சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தச் சதியினால் தான் புலிகள் 2009 ஆம் ஆண்டு யுத்தத்தில் திகைத்து நின்று எதிர்த் தாக்குதல் எதுவும் நடைபெறாமல் புலிகளின் கைகள் கட்டப்பட்டதற்கு இது ஒரு காரணமாய் அமைந்துவிட்டது.

கொலையில் தொடர்பு என்று பேசப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கமும் விடுதலைப் புலிகளும் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டனர். இலங்கையில் ஐந்து வருடங்களுக்கு முன்பு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் கடைநிலை ஊழியராக இருந்து பின் வெளி நாடுகளில் தஞ்சம் புகுந்து இலங்கையில் அமைதி திரும்பி விட்டது என்று தன் சொந்த மண்ணில் வாழ ஆசைப்பட்டு நாடு திரும்பிய பெண் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சூழ்நிலை இப்படி இருக்க, இராசீவ் கொலையில் குற்றம் சாட்டப்பட்ட முக்கிய குற்றவாளியான குமாரன் பத்மநாபன் மாத்திரம் எப்படி பாதுகாப்பாக, சுதந்திரமாக இலங்கை மண்ணில் சுற்றி வர முடிகிறது? கொலையின் போது இவர் இந்தியாவில்தான் தங்கியிருந்திருக்கிறார். சிவராசன் குறிப்பேட்டில் குமாரன் பத்மநாபன் தங்கி இருந்த இடத்திற்கு சிவராசன் சென்று வந்ததற்கான சாட்சியமும் இருக்கின்றன. ஆகவே குமாரன்

பத்மநாபா (கே.பி) இராசீவ் காந்தி கொலை செய்யப்பட்ட காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இல்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது. இன்று விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து விலக்கப்பட்ட கருணாவும் குமாரன் பத்மநாபன் மாத்திரம் இலங்கையில் எப்படி சுதந்திரமாக வலம் வர முடிகின்றது. இது இலங்கை அரசுக்கும் இராசீவ் காந்தி கொலைக்கும் உள்ள தொடர்பை மிகத் தெளிவாக காட்டு கிறதல்லவா! திரு. பிரபாகரனோ, விடுதலைப்புலி களின் தலைவர்களோ இதை நாங்கள்தான் செய்தோம் என்று சொல்லவில்லை.

நாங்கள் கொல்லவில்லை என்றே கூறிவந்தனர். அனால் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து விலக்கப்பட்ட குமாரன் பத்மநாபன் மட்டும் நான் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் என்று கூறிக்கொண்டு, நாங்கள் தான் கொன்றோம் ( விடுதலைப்புலிகள்) என்று பேட்டி கொடுத்தார். இவற்றையெல்லாம் பார்க்கும்போது பலருக்கும் புரிந்திருக்கும் குமாரன் பத்மநாபாவும் கருணாவும் விடுதலைப்புலிகள் அல்ல. அவர்கள் தமிழினத் துரோகிகள் என்று. இவர்களது உண்மை உருவத்தைத் தெரிந்து கொள்ள இருபத்துநான்கு ஆண்டுகள் ஆகியிருக்கிறது.

ஜெயின் கமிசன் முன்பாக திருச்சி வேலுச்சாமி ஆஜராகச் சென்றபோது அவரை உள்ளே அனுமதிக்கவில்லை பின்னர் வேலுச்சாமி சோனியா காந்தியை அணுகினார். இப்படி இருக்க, காங்கிரஸ் தலைவர்களும், தொண்டர்களும் அவர்களது தலைவர் கொலையில் உண்மையான குற்றவாளிகளை கண்டறிய ஏன் முயலவில்லை. தங்களது கட்சிக்கும் தலைவிக்கும் ஏற்பட்டு உள்ள வேதனையையும் அவமானத்தையும் நீக்குவதற்கு ஏன் முன்வரவில்லை.

தமிழக காங்கிரஸ் பெருமக்களே, ராசீவ் காந்தியை தமிழன் கொல்லவில்லை, என்ற உண்மையை உலகிற்கு எடுத்துரைத்து உண்மைக் குற்றவாளிகளை குற்றவாளிக் கூண்டில் ஏற்றுங்கள். இல்லை என்றால் சாமி சொல்வது போல் சோனியா காந்திதான் கொன்றார் என்று மக்கள் நினைக்கும் நிலை ஏற்பட்டுவிடும்.

உண்மையான கொலைக்குற்றவாளி யார் என்பது தெரிந்துவிடக்கூடாது என்பதற்காக பல வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிப்பதற்கு ஆலோசனை சொல்லிக்கொடுத்த மீனவர்களைக் கொள்வது, சிறையில் அடைப்பது, மீன்பிடி படகுகளை அழிப்பது, கைப்பற்றுவது. ஜி பி எஸ் கருவி இருந்தால் உண்மை வெளி உலகிற்குத் தெரிந்துவிடும் என்பதற்காக அந்த மீனவர்கள் மீது கஞ்சா வழக்குப் போட்டு பின்னர் சுப்பிரமணிய சாமிக்கு வேண்டிய அரசான பி ஜே பி வந்தவுடன் மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கிக் கொண்டு விடுதலை செய்தார்கள். இப்படி இரண்டு மூன்று முறை செய்தால் உலக அரங்கில் தமிழன் கஞ்சா கடத்துபவன் என்ற பெயர் வந்துவிடும். அதன் மூலம் உலகின் பல பாகங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழனை அழித்தொழித்து விடலாம் என்று மனப்பால் குடித்துக் கொண் டிருக்கின்றனர். தமிழர்களாகிய நாம் இதையெல் லாம் புரிந்து கொண்டு தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட வேண்டும்.

தன் உரிமைக்காகப் போராடிய தமிழ் இனத்தை பூண்டோடு அழித்த தளபதி பொன்சேகாவுக்கு தீவிரவாதிகளை? அழித்ததற்காக விருது கொடுத்து கௌவித்தார்கள். அப்படி என்றால் தங்களது உரிமைக்காக போராடுகிற மக்கள் தீவிரவாதிகளா? சரி. அவர்கள் தீவிரவாதிகள் என்றால் அவர்களை ஊக்கப்படுத்திய, வளர்த்த புரட்சித் தலைவர் எம்.ஜி.இராமச்சந்திரன் தீவிரவாதத்தை வளர்த்தவரா? இது புரட்சித் தலைவர் மேலேயே களங்கம் கற்பித்தல் ஆகாதா? இப்படிப்பட்ட வர்களை மக்கள் மன்னிப்பார்களா? காங்கிரஸ் இலங்கைத் தமிழர்களை அழித்தது. தற்போதுள்ள அரசோ இந்தியத் தமிழர்களையும் உலகத் தமிழர்களையும் சேர்த்தழிக்க வஞ்சக வலையை விரிக்கிறது. உதாரணம் ஆந்திராவில் 20 அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்ட நிகழ்வு.

இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்தில் தமிழன் அல்லாத ஒரு இந்தியன், இந்தியாவிற்கு வெளியிலோ அல்லது வேறு மாநிலத்திலோ கொல்லப்பட்டால் இந்தியா முழுவதிலும் இருந்து கண்டனக் குரல்கள் எழும்பும். ஆனால், தமிழர்களுக்கோ எங்கும் ஆதரவு இல்லை.


*தமிழர்களின் நிலைமை மிகவும் பரிதாபத்திற்கு ரியதாகவும், கேள்விக்குரியதாகவும் உள்ளது. இதுதான் கூட்டாட்சியின் தத்துவமா?*

*நடுவண் அரசு தமிழர்களை ஏன் நசுக்குகிறது என்று நாம் ஆழமாகச் சிந்தித்தால், தமிழர் களுடைய மதம், வழிபாட்டு முறைகள், கலை, பண்பாடு என்பதெல்லாம் மிக உயர்வாக இருப்பதுதான். தமிழர்கள் ஆடு, மாடு, பன்றி, கோழி முதலிய நாட்டு, காட்டு விலங்குகளை, பறவைகளை பலியிட்டு இயற்கையைத் தெய்வமாக எண்ணி வணங்கி வந்தனர். ஆனால் ஆர் எஸ் எஸ் அமைப்பின் ஊதுகுழலாக இருக்கிற பி ஜே பி அரசு தமிழரின் பண்பாடு வழிபாடுகளுக்கு விரோதமாக மாடுகளை உணவாகக் கொள்ளக் கூடாது என்று கட்டாயப்படுத்துகிறது. அவர்களது நிலைப் பாட்டுக்காக தமிழர்களை அழிக்கத் துணிகின்றனர். தமிழக கூலித்தொழிலாளிகளை மரம் திருடுபவர்கள் என்று சித்தரித்து விட்டு, சுட்டுக் கொன்ற சந்திரபாபு அரசின் மீது நடவடிக்கை எடுக்காது இருக்கின்றனர்.*

*அண்ணன் வைகோ, அண்ணன் தளபதி, அண்ணன் திருமாவளவன் அண்ணன் சீமான் போன்றவர்கள் தங்களது நிலைப்பாட்டை சற்றே மாற்றி வழிபாடுகளை தமிழர் முறைப்படி செய்ய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இவர்களுக் கெல்லாம் முக்கியத்துவம் கொடுக்காத ஊடகங்கள் தமிழ்த்தலைவர்களான இவர்கள் பக்கம் திரும்ப வேண்டும் என்றால் இந்துத்வா என்பதில் உள்ள பார்ப்பனிய ஏமாற்று மோசடிகளை எல்லாம் விலக்கி தமிழர் வழிபாட்டை முழுமையாக இவர்கள் செயல்படுத்த முன்வந்தால் ஊடகங்கள் இவர்கள் பக்கம் திரும்பும். தமிழர்களுக்கும் நல்ல காலம் விடியும்.*

*தொடரும்....*

## எழும்பூர் நீதிமன்றம்



சென்னை எழும்பூரில் இருந்த குற்றவியல் நீதிமன்றங்களுக்கு போதிய இடவசதி இல்லாத தாலும் கட்டிடம், ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட பாரம்பரிய கட்டிடம் என்பதாலும் அவற்றைப் புதுப்பித்து ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து, அங்கு செயல்பட்டுவந்த நீதிமன்றங்கள் சென்ட்ரல் மூர்மார்க்கெட் வணிக வளாக கட்டிடத்துக்கு மாற்றப் பட்டது.

எழும்பூர் நீதிமன்ற வளாகத்தில் ஒருங்கி ணைந்த நீதிமன்றக் கட்டிடம் கட்டும் பணி தொடங் கப்பட்டுள்ளது. இதுகுறித்து உயர்நீதிமன்ற கட்டிட பராமரிப்பு கமிட்டித் தலைவரும், மூத்த நீதிபதியு மான ஆர். சுதாகர் தெரிவித்ததாவது:

எழும்பூர் நீதிமன்ற வளாகத்தில் 12 நீதிமன்றங்கள் செயல்படும் வகையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கும் பணி 2 கட்டமாக மேற்கொள்ளப்படும். முதல்கட்டமாக 7 நிதிமன்ற அறைகளைக் கொண்ட கட்டிடம் சுமார் ரூ 11 கோடி செலவில் கட்டப்படும். இரண்டாவது கட்டமாக, 5 நீதிமன்ற அறைகள் கொண்ட கட்டிடம் கட்டப்படும். இந்த புதிய வளாகத்தில் அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படும். மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்புப் பாதைகள் அமைக்கப்பட உள்ளது.

அண்மையில் நடந்த சில அசம்பாவிதச் சம்பவங்களைத் தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் இங்கு ஏற்படுத்தப்படும். இந்தப் பணிகள் அனைத்தும் ஓராண்டுக்குள் செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது பாரம்பரிய கட்டிடமாக இருப்பதால் புதுப்புக்கும் பணியில், தொல்லியல்துறை அதிகாரிகள், நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நன்றி: **சட்டப்பாதுகாப்பு**


சிறுகதை

இருங்கோவேள்

# மழலைக்கு விடுதி?

ஒரு குறிப்பிட்ட சமூகம் செறிந்து வாழும் பகுதின் நடு நாயகமாக இருந்தது நல்லூர். முக்கியமான அரசியல் கூட்டங்கள் தொடங்கி, பேருந்து வசதி, உணவகம், தங்கும் விடுதி, திரையரங்கு என்று ஒரு சிறு நகரமாகவே திகழ்ந்தது நல்லூர்.

சீனிவாசன் தனது சாதித் தலைவர் நடத்தி வரும் கட்சியில் அந்தப் பகுதிக்கு பொறுப்பாளராக இருந்தான். அந்த நல்லூர் மக்கள் அனைவருக்கும் இவனைத் தெரியும். அவ்வூரில் உள்ள சில பெரிய மனிதர்கள் ஒன்று சேர்ந்து கல்வி நாள் என்று ஒரு நாளைக் கொண்டாடினார்கள்.



கல்வி நாள் விழாவிற்கு சீனிவாசனும் வந்திருந்தான். பல வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தான். விழாவிற்கு நல்லூருக்கு அருகே உள்ள ஊர்களில் நடந்து கொண்டிருக்கும் கல்விக் கூடங்களில் இருந்தெல்லாம் ஆசிரியர்களை வந்திருந்தார்கள். அதில் ஆங்கில வழியாக பாடம் சொல்லித்தரும் ஒரு பள்ளியின் முதல்வரான இருதயராசுவும் வந்திருந்தார். ஒவ்வொருவராக கல்வியைப்பற்றிப் பேசினர். அதில் ஒருவர் பேசுகையில் ஓரிடத்தில் ஆங்கில வார்த்தையை உச்சரித்தார். இதைக் கேட்டு பொங்கி எழுந்தான் சீனிவாசன். எங்கள் தலைவர் தமிழுக்காகவே வாழ்பவர் அவரது கட்சிக்காரன் நான். அவரது சாதியைச் சேர்ந்தவன் நான். இங்கே இருக்கிறவர்களில் அதிகம் பேர் என் சாதிக்காரர்கள்தான். நாங்கள் தலைவர் வழியிலே நடப்பவர்கள்.

ஆகவே ஆங்கிலத்தில் நீங்கள் பேசக் கூடாது என்று ஆவேசப்பட்டான். பேசியவர் அச்சமடைந்து திக்கித் தினறி தமிழ் பேசி விட்டு அமர்ந்தார். அவருக்குப் பின் வந்த அனைவருமே தமிழில் பேசினர். இருதயராசுவோ ஆங்கிலப் பள்ளியின் ஆசிரியர். எல்லோரும் படிக்க வேண்டும் ஆங்கிலத்தையும் படிக்க வேண்டும் என்று சொல்ல நினைத்த அவர் சூழ்நிலையை எண்ணி மிகச் சுருக்கமாக தமிழில் பேசிவிட்டு அமர்ந்தார். ஆனால் அவருக்கு திருப்தியில்லை. நானும் தமிழன் தான்.

ஆனால் மற்ற மொழிகளைப் படிக்கக் கூடாது, தெரிந்து கொள்ளக்கூடாது என்று நினைப்பவன் அல்ல. பிறமொழிகளைக் கற்பது என்பது வேறு, பிறமொழித் திணிப்பு என்பது வேறு. இதை எப்படி இவர்களுக்குப் புரிய வைப்பது என்று புரியாமல் விழா முடித்து வீட்டுக்குச் சென்றார்.

மாதங்கள் உருண்டோடின கல்வி ஆண்டு முடிந்து புதிய கல்வியாண்டு வந்து விட்டது. ஜூன் மாதம் பள்ளியில் சேர்க்கைகள் நடந்து கொண்டிருந்தன. இருதயராசு முதல்வராக இருக்கும் ஆங்கிலப் பள்ளிக்கு சீனிவாசன் வந்தான். இருதயராசு அவனை வரவேற்று அமரச் சொன்னார். சீனிவாசன் இதுவரை பள்ளிக்கு வந்ததே இல்லை. யாரையாவது பள்ளியில் சேர்க்க வேண்டும் என்றால் இருதயராசுவுக்கு கடிதம் எழுதிக் கொடுத்தனுப் புவான் இருதயராசுவும் சேர்த்துக்கொள்ளுவார். இந்த ஆண்டோ நேராகவே வந்திருக்கிறானே என்ற வியப்பு பள்ளியின் முதல்வருக்கு.

அய்யா எனது மகனுக்கு வயது மூன்று ஆகிவிட்டது. எங்க கட்சித் தலைவர் மகன் படிச்ச படிப்பையே என் மகனும் படிக்கணும். எங்க தலைவர் மகன் மாதிரி இங்கிலீசு பேசணும். ஆஸ்ட்டல்லேயே தங்கிப்படிக்கணும். வீட்டுக் கெல்லாம் வரத் தேவையில்லை. முழுப்பரிட்சை லீவுக்கு வந்தா போதும். அந்த மாதிரி என் பையனைச் சேத்துக்குங்க, படிப்புச் சொல்லிக் குடுங்க என்றான் சீனிவாசன், வந்த சிரிப்பை அடக்கிக் கொண்ட முதல்வர் மேடைக்கு ஒரு வாழ்க்கையும் தனக்கென்று ஒரு வாழ்க்கையையும் வாழ்கிறார் களே இவர்களை நினைத்து அழுவதா? சிரிப்பதா என்று எண்ணியவாறே, சீனிவாசனுக்கு விளக்கத் தொடங்கினார் எல்.கே.ஜிக்கு எல்லாம் ஆஸ்டல் வசதி கிடையாது. உங்க தலைவரின் மகன் கூட ஆறாம் வகுப்பிற்குதான் கொடைக்கானல் சென்று படித்தார். ஐந்து வகுப்புவரை இங்கே படிக்கட்டும். அதன்பிறகு உங்கள் தலைவரின் மகன் படித்த பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுங்கள்" என்றார் இருதயராசு.

ஆங்கிலப்பள்ளி முதல்வரின் ஆலோசனையை ஏற்றுக் கொண்ட சீனிவாசன் அவருக்கு நன்றி சொல்லிவிட்டு வெளியில் வந்தார். இருதயராசு இங்குள்ள தலைவர்களைப்பற்றியும், அவர்கள் இரட்டை வேடங்களையும் நினைத்து மனதில் புழுங்கினாலும் தொண்டர்கள், தலைவர்களின் இரட்டை வேடத்தைத் தெரிந்து கொண்டு வாழத் தொடங்கி விட்டார்களே என்று வியந்தார். எல்.கே.ஜிக்கு ஆஸ்டல் கேட்ட அவனது அப்பாவித்தனத்தையும் தலைவர், தமிழ் என்று சொல்லி தன் மகனை மட்டும் ஆங்கிலத்தைப் படிக்க வைத்த பித்தலாட்டத்தையும் புரிந்து கொண்ட புத்திசாலித்தனத்தையும் திரும்பத் திரும்ப நினைத்தவர் இறுதியில் உலகமே இரட்டை வேடத்தில் தான் வாழ்கிறது என்று முடிவுக்கு வந்து தனது வேலையைப் பார்க்கத் துவங்கி விட்டார்.

## "வாட்ஸ் ஆப் மூலம் புகார்"

பேஸ்புக், ட்விட்டர் ஆகியவற்றைத் தொடர்ந்து, வாட்ஸ் ஆப் மூலம் புகார் அளிக்கும் வசதியை பெங்களூரு காவல்துறை அறிமுகம் செய்துள்ளது.

குற்றச்செயல்களால் பாதிக்கப்படுபவர்களில் பலர் காவல் துறையில் புகார் அளிக்க தயங்குகின்றனர். இதை யடுத்த, இமெயில், பேஸ்புக், ட்விட்டர் ஆகியவற் றின் மூலம் புகார் அளிக்கும் வசதியை நாட்டிலேயே முதல் முறையாக பெங்களூரு மாநகரக் காவல் துறை அறி முகம் செய்தது. இதற்கு பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்ததால், பிற மாநில காவல் துறையின ரும் இந்த வசதியைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில் தற்போது "வாட்ஸ் ஆப்" மூலமாக புகார் அளிக்கும் வசதியை பெங்களூரு காவல்துறை அறிமுகம் செய்துள்ளது.

இதுகுறித்து பெங்களூரு ஊர்க்காவல் படை டி.ஜி.பி. எம்.என்.ரெட்டி கூறும்போது, உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள், மாணவர்கள், தொழிலதிபர்கள் பெங்களூரு வந்து செல்கின்றனர். நகரில் நடைபெறும் குற்றச் செயல்களில் பாதிக்கப்படு வோர், காவல் நிலையத்துக்கு வரத் தயங்குகின்றனர். எனவே நவீன தலைமுறியின் வசதிக்காக "வாட்ஸ் ஆப்" மூலம், புகார் தெரிவிக்கும் வசதி அறிமுகப்படுத்தப் பட்டுள் ளது. பாதிக்கப்பட்டவர்களோ, சம்பவத்தை நேரில் பார்த்த வர்களோ 9480801000 என்ற எண்ணில் புகார் தெரிவிக்கலாம் என்றார். இந்தத் திட்டத்துக்கு பெங்க ளூருவாசிகளிம் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.



# ஜனநாயக நாடு?

வாட்ஸ் ஆப் என்ற ஒரு அலைபேசிச் செயலி பலவகையில் உதவினாலும் சிலரின் தகாத நடவடிக்கைகளால் துன்பத்தைத் தரும் ஒன்றாகவே ஆகிப்போய்விட்டது. தனி ஆட்களைப் பாதிக்கின்ற செய்திகளும் படங்களும் உலவுகின்றன. சமுதாயங் களை, மதங்களைப் பாதிக்கின்ற செய்திகளும் படங் களும் உலவுகின்றன.

கடந்த நாட்களில் ஒரு ஒரு மதவெறியரின் பேச்சை ஒளிப்படமாக பார்க்க நேர்ந்தது. அதில் மற்றொரு மதத்தின் தலைவர்களை பேசக்கூடாத, மனிதன் பேசக்கூடாத வார்த்தைகளால் அவர் பேசு கிறார். இல்லை குலைக்கிறார். அதைப் பார்த்து தூண்டப்படுகிற ஒருவர் அவரை தரக்குறைவாகத் திட்டுகிறார். அவரது அம்மாவையும் சேர்த்துத் திட்டுகிறார். இன்னொருவர் உங்களைக் கொல்லா மல் விடமாட்டோம் என்கிறார். இன்னும் ஒருவர் உங்களைக் கொள்வதே எங்கள் மதக்கடமை என்கிறார். இன்னும் சிலர் அவன் என்ன செய்தா லும் செய்யட்டும் நான் செய்வதைச் செய்வேன் என்கிறார். ஏன் இந்த முரண்பாடுகள்.

ஒரு இந்தியன் தனக்குப் பிடித்த மதத்தில் இருக்கலாம். இது ஒரு அடிப்படை உரிமை என்பது இந்த ஆட்களுக்கு ஏன் தெரியாமல் போகிறது. யாரையாவது தூண்டிவிட்டு, அவனிடம் பிச்சையெடுத்து, பொறுக்கித்தின்று வயிறு வளர்க் கிறார்கள். அது மாதிரி சேருகிற பணத்தில் தங்களுக் குத் தகுந்த ஆட்களுக்கு தீனி போட்டு வளர்க் கிறார்கள். சிலர் நான்தான் இந்த மதத்தில் பெரிய மனிதன் நான் இந்த விசயத்தில் உள்ளே இறங்கினால் ரணகளம் ஆகிவிடும் சென்னை நகரமும் தமிழ்நாடும் கொலைக்களமாக ஆகிவிடும் என்று கூறிக்கொண்டு பல தவறான செயல்களில்

ஈடுபட்டு பணங்களைப் பெறுகின்றனர் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாகிப் போய்விட்டது. கட்டப்பஞ்சாயத்து என்ற முறையில் அவர்கள் பலருடைய சொத்துகளை உழைப்பை கொள்ளை யிடுகிறார்கள் என்பதும் நடந்து வருகிறது. காவல்துறையிடம் முறையாக புகார்களை கொண்டு சென்றால், அங்குள்ள சில கருங்காலிகள் திசைதிருப்பி விடுகிறார்கள். எப்படி? நீங்க அவரைப் பார்த்தா உடனே முடிஞ்சுடும். வழக்குன்னு போனீங்கன்னா முடிய ரொம்ப நாளாகும், ரொம்பச் செலவாகும். அவர்கிட்ட இவ்வளவு கொடுத்தா முடிச்சுக் கொடுத்துருவாரு என்ற களவாணித் தனமும் நடக்கிறது.

தற்போது ஒவ்வொருவரும் தனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதற்காக பல வழிகளைப் பின்பற்றுகின்றனர். ஒன்று தனது குடும்பத்தைச் சார்ந்து, சாதியைச் சார்ந்து, தான் வேலை செய்யும் தொழில் சார்ந்து, மதத்தைச் சார்ந்து, தனக்கு ஏதுவான கட்சியைச் சார்ந்து என்று தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு தன்னை காத்துக்கொள்ள விழைகின்றனர்.

ஆனால் சிலரோ இப்படிப்பட்டவர்களின் இயலாமையை கையில் எடுத்துக் கொண்டு தாங்கள் தான் அவர்களது இரட்சகர் என்ற போர்வையில் அவர்களை கொள்ளையிடுகிறார்கள்.

இப்படிப்பட்ட மனிதர்கள் மன்னிக்கக்கூடிய வர்கள் அல்ல. ஒருவன் பாதுகாப்புத் தேடி வருகிறான் என்றால் அவனையே கேடயமாகப் பயன்படுத்திக் கொள்ளும் படுபயங்கர பாதகர்கள் இவர்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் சமமான உரிமைகள் சலுகைகள்தான் உண்டு. அவன் என்ன பெரியவன், இவன் என்ன சிறியவன்? இதை ஒவ்வொரு இந்தியனும் புரிந்து கொள்ள வேண்டும்.

தங்களது சொந்தக் கருத்துகளைத் மற்றவர் களிடம் திணிப்பது, நாளடைவில் அவர்களைத் தங்களது அடிமைகளாக்கிக் கொள்வது என்பது இந்த இருபத்தோராம் நூற்றாண்டிற்கு ஏற்புடைய தல்ல. இதை உணர வேண்டும் அடிமைப்படுத்த நினைப்பவர்கள். ஒரு வேலையைச் செய்தால் அதில் எவ்வளவு சம்பாதிக்கலாம் என்று நினைப்பதில் தவறு இல்லை. அதில் எப்படி கொள்ளையடிப்பது என்று நினைக்கக்கூடாது. அதில் எத்தனை பேரை நாம் உழைக்காமலே, ஒன்றும் கொடுக்காமலே அடிமைப்படுத்திக் கொள்வது என்று சிந்திப்பது என்பது ஒரு வகை வக்கிரம். தலைவன், பணக்காரன், முதலாளி, என்று நினைப்பவர்கள் தங்களுக்காக, அரசியலையும் மதங்களையும் சாதிகளையும் செல்வத்தையும் பயன்படுத்திக் கொண்டு, யாரால் பொருளாதாரத் தில் சமூகத்தில் உயர்ந்தார்களோ அவர்களை அச்சுறுத்துகின்றனர்.

அந்த வகை அச்சுறுத்தல் களுக்கு மோசமான, அழிவுக்குள் ளாகும் ஆளுகைகளுக்கு அவசர அவசரமாக சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவது என்பது இந்தியா வல்லரசாவதைத் தடுக்கும் செயலாகும்.

எனக்கு என்ன உரிமை உண்டோ, அதே எனது எதிராளிக்கும் உண்டு என்பதை உணர்ந்து, தேவையற்ற, சாதி, சமயப் பூசல்களை, வெறிகளை பரவச் செய்யும் செய்திகளை படங்களை சமூக வலைதளங்களில் உலவ விடக்கூடாது. அதை அனுமதிக்கவும் கூடாது.

அப்படிப்பட்ட பேச்சுகளை செயல்களை எவன் பேசினாலும் செய்தாலும் அவன் மனித உரிமைகளை மீறியவனாவான். அதை அரசு பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. கடுமையான நடவடிக்கைகள் எடுத்து மனிதர்களை வாழ்ந்திடச் செய்ய வேண்டும். அப்போதுதான் இந்தியா ஜனநாயக நாடு.

**- வேர்மகள்**

**வெளிநாடு செல்வோர் கவனத்துக்கு:**

வெளிநாடுகளில் உள்ள வேலைவாய்ப்புகள் குறித்து, சென்னை கிண்டி தொழிற்பேட்டையில் இயங்கி வரும் தமிழக அரசின் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் கேட்டு தெரிந்துகொள்ளலாம். 044-22502267, 22505886 என்ற தொலைபேசி எண்களிலும் தொடர்பு கொள்ளலாம். www.omcmanpower.com என்ற இணையதளம் மூலமாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைத் தெரிந்து கொள்ளலாம்.

தனியார் வேலைவாய்ப்பு நிறுவனங்களைப் பற்றி அருகில் இருக்கும் காவல் நிலையத்திலும் அரசின் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திலும் கேட்டு தொந்துகொள்ளலாம்.


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**


கோடைகேற்ற காட்டன் ஆடைகளையும்,
பரவசமூட்டும் அனைத்து வித பள்ளிச் சீருடைகளை
வாங்கி மகிழ்ந்திட அழைக்கிறது
உங்கள்
ராம்
டெக்ஸ்டைல்ஸ் A/c
Let Us Enjoy Summer
விரிவுபடுத்தப்பட்ட மாளிகை
135, நேரு வீதி,
திண்டிவனம்.

MUTRAM - Tamil & English Monthly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month


# Green Leaf

## Premium Green Tea

Top 10 health benefits of
**Green Tea**

1. Improves Brain Health
2. Lowers Blood Sugar Levels
3. Reduces Cholesterol Levels
4. Promotes Oral Health
5. Helps Maintain Body Weight
6. Supports Skin Health
7. Lowers Blood Pressure
8. Reduces the Risk of Cancer
9. Keeps Bones Strong
10. Fights Against Aging

**For Enquiry**

**Call: 9790764721**